சுதேசவாசகம்

நான்காம் புத்தகம்

TB
031,6(4)
N61
139618.

சுதேச வாசகம்

நான்காம் புத்தகம்

[1957ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள, இணைக்கப்பெற்ற ஆரம்பக் கல்விப் பாடத்திட்டப்படி எழுதப்பெற்றது]

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,

அவர்கள் குமாரர்

வி. சூ. சுவாமிநாதன் அவர்களும்

சென்னை, எம். சிடி. முத்தையாச் செட்டியார்

உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்

வித்துவான், பி. எஸ். சண்முகம் பிள்ளை அவர்களும்

தொகுத்தது.

வி. சூ. சுவாமிநாதன்

பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு, மதுரை.

சுங்குராம செட்டித் தெரு, சென்னை.

பதிப்புரிமை]

[விலை 65 ந. பை.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008.
139618
73
031,6(4)
N6

பாரதி பிரஸ், மதுரை :—'61.

முகவுரை

1957ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்டுள்ள, இணைக்கப்பெற்ற ஆரம்பக் கல்வித் தமிழ்ப் பாடத் திட்டப்படி நான்காம் வகுப்புக்கென இப்புத்தகம் எழுதப் பெற்றுள்ளது.

மூன்றும் புத்தகத்தின் தொடர்ச்சியாக உயர்ந்த நடை, புதுச் சொற்கள் முதலியன இப்புத்தகத்தில் புகுத்தப் பெற்றுள்ளன. பாடத் திட்டத்தில் குறிப்பிட்டவாறே உரையாடல்கள், நாடகம், பிரயாணக் கட்டுரை முதலியனவும் பன்னிரண்டு கதைகளும், பாரதியார், தேசிகவிநாயகம் பிள்ளை, பாரதிதாசன் முதலியோர் இயற்றிய பத்துப் பாடல்களும் அமைக்கப்பட்டுள்ளன. செய்யுட் பகுதியில் கட்டபொம்மன் பாடல், ராஜாதேசிங்கு பாடல், நல்வழி, நீதிவெண்பா, சதகச் செய்யுட்கள் ஆகியவற்றிலிருந்து, பாடத் திட்டத்தில் குறிப்பிட்ட வரிக் கணக்கின்படி பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

உரை நடைப் பகுதியில் ஒவ்வொரு பாடத்திலும் வரும் புதுச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவையும் நல்வழி போன்ற செய்யுட்களில் வரும் புதுச் சொற்களும் சேர்ந்து சுமார் 1,000 புதுச் சொற்கள் இருக்கும். போதிய அளவு வினுக்களும் மொழிப்பயிற்சியும் இலக்கணப் பயிற்சியும் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் இவை போன்ற பயிற்சிகளை மேலும் தயாரித்துப் பயன்படுத்தலாம்.

தொகுத்தோர்

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1	தமிழ் நாடு	...	7
2	ஆடுவோமே	...	10
3	திலகரின் கலங்கா நெஞ்சம்	...	11
4	பட்டு	...	13
5	உடற்பயிற்சி	...	16
6	உண்மையே உயர்வு தரும்	...	19
7	பெண்கள் விடுதலைக் கும்மி	...	23
8	மரியாதை இராமனின் மதி நுட்பம்	...	24
9	பொருட்காட்சி	...	26
10	சைக்கிள்	...	30
11	அரசரைக் கண்டுபிடித்த அப்பாஜி	...	31
12	கடல்	...	34
13	கப்பலோட்டிய தமிழர்	...	35
14	குதிரை அடிமையான கதை	...	39
15	சாரணர் நோக்கம்	...	42
16	தபால் முறையின் வளர்ச்சி	...	42
17	நிலவு	...	45
18	அரசனும் சிலந்தியும்	...	46
19	கொலம்பஸ்	...	49
20	தெனாலிராமன் தன் மைத்துனனைக் காத்தல்	...	52
21	தமிழ் இலக்கியம்	...	55
22	தீக்குச்சி சொல்லும் கதை	...	56
23	வீண்பெருமை கொண்ட நரி	...	60
24	உலகப்போக்கு	...	62
25	பச்சோந்தி	...	64

எண்	பொருள்		பக்கம்
26	பொங்கல் விழா	...	67
27	பரமார்த்த குருவும் மாணவர்களும்	...	70
28	ஆலமரம்	...	75
29	மாதிரிக் கடிதங்கள்	...	76
30	நன்றியற்ற பாம்பு	...	77
31	சேரன் அளித்த பரிசு	...	81
32	ராஜா தேசிங்கு	...	85
33	வாழிய கொடியே!	...	88
34	கட்டபொம்மன்	...	89
	செய்யுள்கள்		
	நல்வழி	...	91
	நீதி வெண்பா	...	92
	திருவேங்கட சதகம்	...	94
	தண்டலையார் சதகம்	...	94
	குமரேச சதகம்	...	95

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா,
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா,
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா,
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய, ஜய ஹே!

—ரவீந்திரநாத தாகூர்

பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.
நின் திருநாமம், பஞ்சாப்பையும் ஸிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

Correct Version used. Vide R. C. No. 33/TBC/56 dated 12-7-'56.

1. தமிழ் நாடு

நாம் பேசுவது தமிழ் மொழி.. தமிழ் பேசுபவர்கள் வாழும் நாட்டுக்குத் தமிழ் நாடு எனப் பெயர். தமிழ் நாடு தென்னிந்தியாவின் தென்பகுதியாகும். பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாடு கிழக்குக் கடற்கரைக்கும் மேற்குக் கடற்கரைக்கும் இடையே, தெற்கில் கன்னியா குமரீ முதல், வடக்கே வேங்கடம் என்ற திருப்பதிவரை பரவியிருந்தது.

நம் தமிழ் நாட்டை முற்காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்தனர். தமிழ் நாட்டு மூவேந்தர்கள் நீதி செலுத்துவதில் இணையில்லாதவர்கள். அவர்கள் காலத்தில் தமிழ்க்கல்வி ஓங்கி வளர்ந்திருந்தது. பயிர்த்தொழில் செழிப்புற்றிருந்தது. மக்கள் பெரியதோணிகள் செய்து, அவற்றில் நம் நாட்டில் விளையும் சரக்குகளை ஏற்றிக்கொண்டு பல இடங்களுக்கும் சென்று வாணிபம் செய்துவந்தனர். அயல்நாடுகளோடு அவர்கள் வாணிபம் செய்தனர். தமிழர் நெசவுத் தொழிலில் கைதேர்ந்தவர்களாயிருந்தனர். சிறந்த படை வீரர்களாய் விளங்கினர். அவர்களுக்கு இரும்பு முதலிய உலோகங்களால் பலவித ஆயுதங்கள் செய்யத் தெரிந்திருந்தது. சிற்பம், இசை, நாட்டியம், மருத்துவம், ஓவியம் முதலிய பல கலைகளிலும் அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அவர்களது அரசியல் முறை சிறந்திருந்தது.

சேர நாடு :— இது கேரளம் என்றும் சொல்லப்படும். இதில் கொச்சி, மலையாளம், திருவாங்கூரின் வடபாகம், சேலம் மாவட்டத்தின் பெரும் பகுதி முதலிய தற்காலப் பகுதிகள் அடங்கியிருந்தன. சேர நாட்டிற்குத் தலைநகரம் வஞ்சி. இதன் துறைமுகங்கள் முசிரி, மாந்தை, தொண்டி முதலியன. கோவலனது சரிதையாகிய சிலப்பதிகாரம் என்னும் தமிழ்க் காவியத்தைப் பாடிய இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவன் என்னும் அரசனது தம்பியே. சேர அரசர்களின் கொடி வில் கொடியாகும்.

சோழ நாடு :—இதில் தற்காலத்திய திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னுற்காடு, கோயம்புத்தூர் முதலிய பகுதிகள் அடங்கியிருந்தன. சோழநாடு காவிரீப் பாய்ச்சலால் மிகவும் செழிப்பாய் இருந்தது. இந்நாட்டிற்குத் தலைநகரம் திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள உறையூர். பிற்காலத்தில் தஞ்சையும் இதன் தலைநகராய் விளங்கிற்று. இந்நாட்டிற்குத் துறைமுகமாய் விளங்கியது காவிரீப்பூம்பட்டினம். அது காவிரி நதி கடலொடு கலக்குமிடத்தில் இருந்தது. அங்கு ஒரு கலங்கரை விளக்கம் இருந்ததாகவும், பட்டினம் வெகு அழகாய் அமைந்திருந்ததாகவும், ஒரு காலத்தில் சோழ ராஜ்யத்தின் தலைநகராய் விளங்கியதாகவும் தமிழ் நூல்களிலிருந்து தெரிய வருகிறது. அக்காலத்தில் அது ஒரு பெரிய வாணிப நகரம். தமிழில் இராமாயணம் பாடிய கம்பர் சோழ நாட்டில் பிறந்தவரே. சோழர்களின் கொடி புலிக்கொடியாகும்.

பாண்டிய நாடு :— இது சோழ நாட்டிற்குத் தெற்கே இருந்தது. இதில் தற்காலத்திய மதுரை, திருநெல்வேலி இராமநாதபுரம் மாவட்டங்களும் திருவாங்கூரின் சில பாகங்களும் சேர்ந்திருந்தன. முதலில் மணலூர் பாண்டிய நாட்டின் தலைநகரமாயிருந்தது. பின்னர் மதுரை தலைநகரமாகியது. மதுரையிலுள்ள மீனுட்சி சுந்தரேசுவரர் கோவில் உலகப் புகழ் பெற்றது. பண்டைக் காலத்தில் மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது. பல தமிழ்ப் புலவர்கள் அக்காலத்தில் கூடி, பல அரிய பெரிய தமிழ் நூல்களை இயற்றினர். அரசர்களும் புலவர்களாகவே விளங்கினர். இந்நாட்டின் துறைமுகம் கொற்கை. அயல் நாட்டு வணிகர்கள் கொற்கையில் இறங்கி, தங்கள் சரக்குகளை விற்பனை செய்து, இங்கிருந்து மீன், முத்து, பவளம், தந்தம், மயில் முதலியவைகளை வாங்கிச்செல்வார்கள். பாண்டிய மன்னர்களுக்கு மாறன் என்றும் வழுதி என்றும் பட்டப் பெயர்கள் உண்டு. அவர்களுடைய கொடியிலும் நாணயங்களிலும் மீன் உருவம் வரையப்பட்டிருந்தது.

அக்காலத்தில் நம் தமிழ் நாடு பல துறைகளில் சிறந்து விளங்கியது. நாமும் நம் தமிழ் மொழியையும், தமிழ் நாட்டையும் எவ்வகையிலும் சிறந்தோங்கச் செய்வோமாக.

அரிய	சங்கம்	காவியம்	அரசியல் முறை
பகுதி	முத்து	சிற்பம்	கைதேர்ந்தவர்
சரக்கு	பவளம்	தலைநகர்	பண்டைக்காலம்
தோணி	சரிதை	மூவேந்தர்	மாவட்டம்
கலை	தந்தம்	மருத்துவம்	துறைமுகம்
இணை	உருவம்	பயிர்த்தொழில்	கலங்கரைவிளக்கம்
துறை	புலவர்கள்	ஆயுதங்கள்	உலோகங்கள்
இசை	நாட்டியம்	பட்டப்பெயர்	நெசவுத்தொழில்

அருஞ்சொற்பொருள்

மூவேந்தர் - மூன்று அரசர்கள்; சேர சோழ. பாண்டியர். சரக்கு-சாமான். தோணி – படகு. கைதேர்ந்தவர் - திறமையுள்ளவர்.

வினாக்கள்

1. பின் வரும் வார்த்தைகளை வாக்கியங்களிலமை :—
   பரவு, நூல், பண்டைக்காலம், சிற்பம், ஓவியம்.
2. பாண்டிய அரசர்களின் பட்டப் பெயர்களை எழுது.
3. சேர, சோழ நாட்டின் அக்காலத்திய எல்லைகளைக் குறிப்பிடு.
4. தமிழ் நாடு மிகவும் நாகரிகமடைந்திருந்தது என்பதற்கு உதாரணங்கள் கூறு.

பயிற்சி

(1) அ முதல் ஔ வரையிலுள்ள பன்னிரண்டும் உயிர் எழுத்துக்கள் எனப்படும். பிற எழுத்துக்களின் உதவியின்றியே இவற்றை ஒலிக்க முடியுமாகையால் இவை இப்பெயர் பெற்றன. இவற்றில் குறுகிய ஓசையுடையவை குறில் அல்லது குற்றெழுத்துக்கள் எனப்படும். நீண்ட ஓசையுடையவை நெடில் அல்லது நெட்டெழுத்துக்கள் எனப்படும்.

அ, இ, உ, எ, ஒ—குறில் ஐந்து.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—நெடில் ஏழு.

(2) க் முதல் ன் வரையிலுள்ள பதினெட்டும் மெய்யெழுத்துக்கள் எனப்படும். இவற்றில்,

க், ச், ட், த், ப், ற் —வல்லினம்.

ங், ஞ், ண், ந், ம், ன் —மெல்லினம்.

ய், ர், ல், வ், ழ், ள் —இடையினம்.

(3) பின் வரும் சொற்களிலுள்ள ஒவ்வோர் எழுத்தும் எந்த வகையைச் சேர்ந்தது என்று எழுது :—

அரம், ஈனம், எங்கு, ஓடம், கலம்.

2. ஆடுவோமே

ஆடுவோமே—பள்ளுப்
பாடுவோமே ;
ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோமென்று (ஆடுவோமே)
உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்.
விழலுக்கு நீர்பாய்ச்சி
மாயமாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்துடலம்
ஓய மாட்டோம் ! (ஆடுவோமே)
நாமிருக்கும் நாடு நமது
என்ப தறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம்
என்ப தறிந்தோம்—இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி
அடிமை செய்யோம்—பரி
பூரணனுக்கே யடிமை
செய்து வாழ்வோம் ! (ஆடுவோமே)

—பாரதியார்

மாய	பள்ளு	வந்தனை	சுதந்திரம்
ஓய	வீணர்	அடிமை	உரிமை
விழல்	உடலம்	நிந்தனை	பரிபூரணன்

அருஞ்சொற்பொருள்

வந்தனை - வணக்கம். நிந்தனை - வைதல். விழல் - புல். மாய - சாக. உடலம் - உடம்பு. பரிபூரணன் - கடவுள்.

வினாக்கள்

1. நாம் எதற்கு வந்தனை செய்வோம்?
2. நாம் என்ன செய்யமாட்டோம்?
3. நாம் அறிந்து கொண்டது என்ன?
4. இனி எவருக்கு அடிமை செய்யமாட்டோம்? எவருக்கு அடிமை செய்வோம்?

3. திலகரின் கலங்கா நெஞ்சம்

சிறுவர்களே! நீங்கள் பால கங்காதர திலகரின் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அன்பும் அறிவும் மற்றும் பல நல்லியல்புகள் நிரம்பியவர் அவர். அஞ்சாமையும் உண்மையும் அவரது சிறப்பியல்புகளாக விளங்கின.

சிறுவராயிருந்தபொழுது திலகர் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் வகுப்பில் மாணவர்கள் நிலக்கடலையைத் தின்றுவிட்டுத் தோலைத் தரையில் போட்டிருந்தனர். ஆசிரியர் வகுப்பினுள் வந்ததும் தரையில் நிலைக்கடலைத் தோல் சிதறியிருப்பதைக் கண்டார். உடனே அவர் எல்லா மாணவரையும் தோலை எடுத்தெரிந்து தரையைத் தூய்மை செய்யும்படி கட்டளையிட்டார்.

எல்லா மாணவர்களும் அவ்விதமே செய்யத் தொடங்கினர். ஆனால் திலகர் மட்டும் தம் இடத்தில் பேசாமல் நின்றார். ஆசிரியர் திலகரைப் பார்த்து, "ஏன் நிற்கிறாய்? தோலை எடுத்து விட்டுத் தரையைத் தூய்மை செய்வதற்கென்ன?" என்று கேட்டார். பத்து வயதுப் பாலரான திலகர் அஞ்சாமல் "ஐயா! நான் நிலக்கடலை தின்னவில்லை. அப்படியிருக்கையில் நான் ஏன் அவ்வேலையைச் செய்ய வேண்டும்?" என்று பதிலளித்தார். மற்ற மாணவர்கள், ஆசிரியரிடம் திலகரும் நிலக்கடலை தின்றுவிட்டு, பொய் சொல்வதாகக் குறை கூறினர்.

ஆசிரியர் மீண்டும் திலகரைத் தரையைத் தூய்மை செய்யும்படி கட்டளையிட்டார். ஆனால் அவர் அசையாது தம் இடத்தில் நின்றார். ஆசிரியர் சினங்கொண்டு, "நீ வெளியே

செல்,'' என்று உத்தரவிட்டார். திலகரும் அக்கணமே வெளி யேறித் தம் வீட்டையடைந்தார்.

பின்னர் ஆசிரியர் திலகரின் தந்தை கங்காதரரிடம் எல்லாவற்றையும் கூறினர். அவரும், "என் பையனுக்குக் கடைப் பண்டம் எதுவும் வாங்கிச் சாப்பிடும் வழக்கம் கிடையாது. அவன் கூறியது உண்மைதான்,'' என்ருர். அதைக் கேட்ட ஆசிரியர், திலகரை வகுப்பை விட்டு வெளி யேறச் சொன்னதற்காக வருந்தினர்.

சிதறி	இயல்பு	மீண்டும்	கட்டளையிடு
குறைகூறு	பாலர்	தூய்மை	வருந்தினர்
பதிலளி	வெளியேற	நெஞ்சம்	கேள்விப்பட்டு
பண்டம்	அக்கணமே	உத்தரவிடு	சினங்கொண்டு

வினக்கள்

1. திலகரின் சிறப்பியல்புகள் என்ன?
2. வகுப்பினுள் நுழைந்த ஆசிரியர் கண்டது என்ன?
3. ஆசிரியர் என்ன கட்டளை யிட்டார்?
4. திலகர் ஏன் ஆசிரியரின் கட்டளைப்படி நடக்கவில்லை?
5. திலகரின் தந்தை ஆசிரியரிடம் கூறிய தென்ன?

பயிற்சி

(1) உயிர்மெய்யெழுத்து: மெய்யெழுத்து முன்னும், உயிரெழுத் துப் பின்னுமாக இணைந்து ஒலிக்கும் எழுத்துக்கள் உயிர்மெய் யெழுத்துக்கள் எனப்படும்.

(உ-ம்) க் + அ = க. ச் + இ = சி.
ண் + ஐ = ணை. ல் + ஒ = லொ.

பதினெட்டு மெய்களுடன் பன்னிரண்டு உயிர்களும் சேர்ந் தால் இருநூற்றுப் பதினறு உயிர்மெய்யெழுத்துக்கள் தோன்றும்.

ஆய்த எழுத்து என்பது மூன்று புள்ளி வடிவ எழுத்து (ஃ)

(2) பின் வரும் வாக்கியங்களைப் படி :—

குரங்கு பழங்களைத் தின்றது.
முதலை கங்கையில் வாழ்ந்தது.

இவற்றில், குரங்கு, பழங்கள், முதலை, கங்கை இவை பெயர்ச் சொற்கள். தின்றது, வாழ்ந்தது இவை வினைச்சொற்கள்.

(3) இப்பாடத்தின் முதலிரண்டு பத்திகளிலுள்ள பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் எடுத்து எழுது.

4. பட்டு

பருத்திப் பஞ்சிலிருந்து நெய்யப்பட்ட ஆடைகளை எல்லோரும் உடுத்துகின்றனர். ஆனால் பணம் உள்ளவர்களே பட்டினாலான ஆடைகளை அணிகிறார்கள். பட்டாடைகள் பளபளப்பாகவும் மிருதுவாகவும் இருக்கும். பட்டு நூல் ஒரு வகைப் பூச்சியால் அமைக்கப்படும் கூட்டிலிருந்து கிடைக்கிறது. இப் பூச்சிக்குப் பட்டுப் பூச்சி என்று பெயர். பட்டு எப்படி உண்டாகிறது என்பதைப்பற்றிக் கவனிப்போம்.



1. பட்டுப்பூச்சி முட்டையிடுதல். 2. பட்டுப்புழு முசுக்கட்டை இலையைத்தின்கிறது. 3. பட்டுப்புழுவின் கூடு (பிளந்துகாட்டப்பட்டுள்ளது) 4. கூட்டுப்புழு.

தாய்ப்பூச்சி முசுக்கட்டை இலையின்மேல், கடுகுபோல் சிறுத்த முட்டைகளை இடும். அம்முட்டைகள் ஏறத்தாழ இரு நூறு முதல் நானூறுவரை இருக்கும். அம்முட்டைகளெல்லாம் சூரிய வெப்பத்தினால் பொரிந்து புழுக்கள் வெளிப்படும். முட்டையிலிருந்து வெளிப்பட்ட புழு ஏறத்தாழ அரைக்கால் அங்குல நீளமுள்ளதாகவும், சாம்பல் நிறமாயு மிருக்கும்.

இப்புழு முசுக்கட்டை இலையைத் தின்று வளர்ந்து, ஒரு வாரத்தில் நன்ருய்ப் பருத்துவிடும். பிறகு தன் தோலை உரித்துக்கொண்டு வெண்மை நிறமாகும். இவ்வாறே அப் புழு ஐந்தாறு நாட்களுக்கு ஒரு முறையாக நாலைந்து தடவை தன் தோலை உரித்துக்கொள்ளும். வெண்மையாய் இருந்த புழு, தோல் உரியவும் மஞ்சள் நிறமாக மாறிக் கடைசியில் பசுமை நிறமாய்விடும். உடனே முசுக்கட்டை இலையைத் தின்பதை நிறுத்திவிடும்.

இப்பொழுது பட்டுப்புழு, ஒன்றரை அல்லது இரண்டு அங்குல நீளமுள்ளதாக இருக்கும். அப்புழு முசுக்கட்டைச் செடியின் கிளையில் தன் கூட்டைக் கட்டத் தொடங்கும். அதற்காக அது, தன் வாயின் கீழுள்ள துளைகள் வழியாக ஒரு வகைப் பிசினை வெளிப்படுத்தும். இந்தப் பிசின், மஞ்சள் நிறமாகவும் பளபளப்பாகவும் இருக்கும். இப்பிசினி லிருந்து நூல் நூற்றுத் தானும் உள்ளே இருந்துகொண்டு தன் உடலை மறைக்கும்படியான ஒரு கூட்டை அமைத்துக் கொள்ளும். இதற்கு மூன்று நான்கு நாட்களாகும். இப் படிக் கட்டிய கூடு முட்டை வடிவமாயிருக்கும். கூட்டில் அடைபட்ட புழு மறுபடியும் ஒரு தரம் தோலுரித்துப் பொன் னிறம் அடைகிறது.

பிறகு அப்புழு தன் கூட்டுக்குள்ளேயே பதினைந்து இருபது நாட்கள் உறங்கிக் கிடக்கும். இந்த உறக்கமே அதன் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாய் இருக்கின்றது. கூட்டுக்குள் இருக்கும்போது, நாளாக ஆக, உருவம் மாறிக் கொண்டே வந்து, கடைசியில் இறகு முளைத்த பட்டுப் பூச்சியாகிக் கூட்டைத் துளைத்துக்கொண்டு வெளியேறு கிறது. இதுவே பட்டுப் பூச்சியின் இயற்கை வளர்ச்சி.

இவ்வாறு பூச்சியை வெளியேறவிட்டால், கூட்டி லுள்ள பட்டுநூல் சின்னபின்னமாய் அறுந்துபோகும். ஆகையால் பூச்சி உள்ளிருக்கும்பொழுதே கூட்டை வெந் நீரில் போட்டுப் பூச்சியைக்கொன்று, பட்டு நூலை எடுத்துக் கொள்வார்கள். இவ்வாறு எடுத்த பட்டு, அழுக்கு நீக்கும் காரம் கலந்த தண்ணீரில் கழுவித் தூய்மை செய்யப்படுகிறது.

பிறகு அதன் நுனியைத் தேடிபிடித்துக் கழிகளில் சுற்று வார்கள். ஏறக்குறைய இரண்டாயிரம் கூடுகளிலிருந்து ஒரு ராத்தல் பட்டு நூல் கிடைக்கும். இந்தப் பட்டிலிருந்துதான் புடவைகளும் பிற பட்டுத் துணிகளும் நெய்யப்படுகின்றன.

பட்டுப் பூச்சி முதலில் நம் நாட்டில் இருக்கவில்லை. சீனு நாட்டில் மட்டும் இப்பூச்சிகளை வளர்த்துப் பட்டாடைகள் நெய்து, நல்ல லாபம் அடைந்து வந்தனர். பின்னர் ஐரோப்பியப் பாதிரிகள் மூலம் இது பல நாடுகளுக்கும் பரவலாயிற்று. இப்பொழுது உலகத்தில் பல நாட்டினர் பட்டுப் பூச்சிகளை வளர்க்கிருர்கள். நமது நாட்டில் வங்காளம், மைசூர், காஷ்மீரம் முதலிய இடங்களில் பட்டு அதிகம். நமது இராஜ்யத்தில் காஞ்சீபுரம், மைசூரில் கொள்ளேகாலம், பெங்களூர், பெத்தாபுரம் முதலிய இடங்களிலும் பட்டாடைகள் நெய்யப்படுகின்றன.

உதவி	பரவ	பொரிந்து	துளைகள்
பிசின்	கழிகள்	உறங்கி	முசுக்கட்டை
அறுந்து	மிருதுவாக	பொன்	பளபளப்பாய்
பாதிரி	பருத்து	உடுத்து	நிறுத்திவிடும்
அதிகம்	நெய்யப்பட்ட	சிறுத்த	சின்னுபின்னம்
தேடிப்பிடி	ஐரோப்பிய	சாம்பல்	துளைத்துக்கொண்டு
ராத்தல்	வடிவம்	உரித்து	

அருஞ்சொற்பொருள்

பிசின் – பசை. உறங்கி – தூங்கி. உதவாது–பயன்படாது. பாதிரி–கிறிஸ்துவ மதத் துறவி. பொரிந்து – வெடித்து.

வினுக்கள்

1. பட்டுப் பூச்சியின் வளர்ச்சியைப் பற்றி ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் எழுது.

2. பட்டு எப்படி எடுக்கப்படுகிறது ?

3. பட்டாடைக்கும் பருத்தி ஆடைக்கும் உள்ள வேறுபாடு என்ன ?

பயிற்சி

(1) எதிர்மொழி கூறு:—ஏழை, மிருது, வெப்பம், உறக்கம், இயற்கை, வெந்நீர், தூய்மை.

(2) அ, இ, உ என்ற மூன்று எழுத்துக்களும் பொருள்களைச் சுட்டுவதில் பயன்படுகின்றன. அவ்வாறு சுட்டுப்பொருளில் வரும்பொழுது இவை சுட்டெழுத்துக்கள் எனப்படும்.

(உ-ம்) அந்த, இந்த, உந்த
அம்மனிதன், இப்புத்தகம், உவ்வீடு.

எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய எழுத்துக்கள் சில சொற்களில் வினாப்பொருளைத் தரும். அப்பொழுது அவை வினாவெழுத்துக்கள் எனப்படும்.

(உ-ம்) எப்பொருள் ? யாவன் ? அவனா ? கேசவனோ ? ஏது?

(3) பின்வரும் சொற்களில் சுட்டெழுத்துக்களையும் வினாவெழுத்துக்களையும் குறிப்பிடு:—

அவன், அம்மா, இம்மனிதன், இறகு, உம்மனிதன், உரிமை, எங்கு, ஏணி, யானை, யார்.

(4) மாதிரியில் காட்டியது போல் பிரித்தெழுது :

பசும்பொன்	=	பசுமை+பொன்
செம்மரம்	=	
வெண்சாமரை	=	
கருங்குரங்கு	=	

5. உடற்பயிற்சி

இவ்வுலக வாழ்க்கையை நாம் திறமையுடன் நடத்துவதற்கு, நமது உடல் நோய்களால் துன்புறாமல், வலிமை பெற்றிருக்க வேண்டும். மாணவர்களாகிய உங்களுக்குக் கல்வி கற்பதே முதன்மையான வேலை. நீங்கள் காய்ச்சல் முதலிய நோய்களால் துன்புறும் பொழுது, உங்களுடைய வேலையைச் சரிவரச் செய்ய முடிவதில்லை. அது போலவே எல்லோருக்கும் அவரவர் தொழிலைத் திறம்படச் செய்வதற்கு உடல் நலம் இன்றியமையாதது.

நமது உடல் வலிமை பெறுவதற்கு, நாம் செய்யவேண்டுவது யாது? இந்த வினாவிற்குச் சுருக்கமாக, 'உடற்பயிற்சி செய்தல்' என்று விடையளிக்கலாம். சிறுவர்கள் மிகுதியாக வேலை செய்தால், அவர்களுடைய உடல் நலம் கெட்டுவிடுமென்று அஞ்சும் பெற்றோர் சிலர் இருக்கிறார்கள். இவர்கள்

நமது உடம்பின் இயல்பை அறியாதவர்கள் என்று சொல்லலாம். உழைப்பினுல்தான் நமது உடல் உரம் பெறுகிறது. உடலுழைப்பு ஏதும் இல்லாதிருப்பவர்கள் வலிமை குறைந்து எளிதில் நோயுறுவார்கள்.

கல்வி பயிலும் பருவத்திலுள்ள மாணவர்களுக்குத் தனிப்பட்ட உடற்பயிற்சிகள் இன்றியமையாதவை. நீங்கள் முக்கியமான சில உடற்பயிற்சிகளை நாள்தோறும் செய்துவர



வேண்டும். உங்களுக்கு உடற்பயிற்சி இன்றியமையாதது என்பதை வற்புறுத்தவே பள்ளி நேரத்தில், வாரத்திற்கு இரண்டு மூன்று நாட்களில் உடற்பயிற்சி விளையாட்டுக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

காலை, மாலை வேளைகளில் திறந்த வெளிகளில் உடற்பயிற்சி செய்யவேண்டும். ஓடுதல், குதித்தல், பலவகையான பந்தாட்டங்கள் போன்ற விளையாட்டுக்களில் நீங்கள் ஈடுபடலாம். தண்டால் எடுத்தல், பஸ்கிபோடுதல் போன்ற பயிற்சிகளையும் செய்யலாம். நீந்துவதும் ஒரு நல்ல பயிற்சியாகும். சடுகுடு, கிளித்தட்டு போன்ற விளையாட்டுக்களும் உடலுக்கு நல்ல பயிற்சியளிக்கும்.

உடற்பயிற்சி செய்யும்பொழுது உடலில் வேர்வை உண்டாகும். இதனல் உடலிலுள்ள கழிவுப் பொருள்கள் நீக்கப்படுகின்றன. திறந்தவெளிக் காற்றை உட்கொள்ளுவதால், இரத்தம் சுத்தமடையும். நமது தசைகளுக்கு இரத்த ஓட்டம் அதிகமாகப் பாய்வதால் அவை வளர்ச்சி யடையும். நல்ல பசி எடுக்கும். உடற்பயிற்சி செய்பவர்கள் சத்துள்ள உணவுகளைப் புசிக்கவேண்டும்.

உடற்பயிற்சி செய்யும்போது அளவுமீறிச் செய்து கொண்டே இருக்கக்கூடாது. களைப்பு ஏற்பட்டுவிட்டால் உடற்பயிற்சியை நிறுத்திவிட்டு, ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். நாளடைவில் பயிற்சிக் காலத்தையும், பயிற்சி அளவையும் சிறிது சிறிதாக அதிகப்படுத்தலாம்.

குறித்த வேளைகளில் ஒழுங்காக உடற்பயிற்சி செய்து வந்தால், உடல் வலிமையும் சுறுசுறுப்பும் ஏற்படுவதுமல்லாமல், மூளையும், அறிவும் வளர்ச்சியடையும். உடல் வலிமையற்றவர்கள் பெரிய அறிவாளிகள் ஆவது அரிது.

சத்து	புசிக்க	வலிமை	திறம்பட
பயில்	நலம்	ஈடுபட	அறிவாளி
அரிது	உரம்	வாழ்க்கை	துன்புறுமல்
ஓய்வு	மிகுதி	விடையளி	திறந்தவெளி
களைப்பு	பருவம்	வற்புறுத்த	இன்றியமையாத

அருஞ்சொற்பொருள்

துன்புருமல் – கஷ்டப்படாமல். திறம்பட – சிறந்த முறையில், நன்ருக. இயல்பு – தன்மை. உரம் – வலிமை. பயிலும் – கற்கும். வற்புறுத்த – உறுதியாகச் சொல்ல. ஈடுபடலாம் – சேர்ந்து உழைக்கலாம். நாளடைவில் – நாளாக ஆக. அரிது – பெரும்பாலும் இல்லை.

வினக்கள்

1. உடல் நலம் எதற்கு இன்றியமையாதது?
2. மாணவர்கள் செய்யத் தகுந்த சில உடற்பயிற்சிகளை எழுது.
3. உடற்பயிற்சி செய்வதால் நம் உடம்பு எவ்வாறு வலிமை பெறுகிறது?

பயிற்சி

(1) எதிரான பொருளுடைய சொற்களை எழுது :—

துன்புறு; அரிது; அதிகப்படுத்து; இல்லை; செய்யலாம்.

(2) பின்வரும் சொற்களின் பொருள் வேறுபாடு விளங்கும்படி வாக்கியங்களில் உபயோகி:—

1. வழி, வலி. 2. கலை, கழை, களை. 3. பறவை, பரவை. 4. இறங்கு, இரங்கு.

6. உண்மையே உயர்வு தரும்

அராபிய நாட்டைச் சேர்ந்த ஜீலான் நகரத்தில் ஒரு சிறுவன் வாழ்ந்து வந்தான். அவன் நல்ல அறிவாளி. அவனது அறிவைக்கண்ட ஊரார் அவனைப் பாக்தாது நகரத்துக்குச் சென்று கல்வி கற்றுவரச் சொன்னார்கள்.

சில நாட்களில் வணிகர்களின் கூட்டம் ஒன்று பாக்தாதுக்குப் புறப்பட்டது. சிறுவனின் பெற்றோர் தங்கள் மகனையும் அக்கூட்டத்தாருடன் சேர்த்து அனுப்பினர். சிறுவனின் தாய் வழிச் செலவுக்காக நாற்பது பொன் நாணயங்களை அவனது சட்டையினுள் வைத்துத் தைத்தாள்.

பின்பு சிறுவனுக்கு விடை கொடுத்து அனுப்பும் போது, "குழந்தாய்! எப்போதும் உண்மையே பேசு. என்ன நேர்ந்தாலும் பொய் பேசாதே," என்று அறிவுரை கூறினாள்.

சிறுவனும், "அம்மா, நான் எப்போதும் உண்மையே பேசுவேன். என் உயிருக்குத் தீங்கு நேர்ந்தாலும் பொய் பேசமாட்டேன்," என்று உறுதியாகக் கூறினான்.

பிறகு வணிகர்களின் கூட்டத்துடன் சேர்ந்துகொண்டான். எல்லோரும் பாக்தாது நகரத்தை நோக்கிப் பயணம் செய்தனர். மூன்றும் நாள் வெயில் கடுமையாக இருந்ததால், அவர்கள் வழியில் தங்கி இளைப்பாறினர்.

அப்போது கொள்ளைக் கூட்டம் ஒன்று அவ்வழியே வந்து, வணிகர்களைத் தாக்கியது. திருடர்கள் அவர்களிடமிருந்த எல்லாப் பொருள்களையும் கவர்ந்து கொண்டனர். திருடர்களில் ஒருவன் சிறுவனைப் பிடித்துக்கொண்டு, "டேபயா! உண்மையைச் சொல். உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது?" என்று கேட்டான்.

சிறுவன் "என்னிடம் நாற்பது பொன் நாணயங்கள் உள்ளன," என்று கூறினான்.

திருடனுக்குச் சிறுவனின் பேச்சில் நம்பிக்கை ஏற்படவில்லை. அவன் தன் தலைவனிடம் சிறுவனை அழைத்துச் சென்றான்.

"உண்மையைச் சொல். உன்னிடம் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன?" என்று தலைவன் கேட்டான்.



"என்னிடம் துணிகளும், புத்தகங்களும் நாற்பது பொன் நாணயங்களும் உள்ளன," என்று சிறுவன் மீண்டும் சொன்னான்.

தலைவன் சிறுவனைச் சோதித்தான். ஆனால் நாணயங்கள் கிடைக்கவில்லை. உடனே சிறுவன் நாணயங்கள் சட்டையினுள் வைத்துத் தைக்கப்பட்டிருப்பதாகக் கூறினான். திருடர் தலைவன் தையலைப் பிரித்தவுடன் பொன் நாணயங்கள் கீழே விழுந்தன. எல்லோரும் இதை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

திருடர் தலைவன் சிறுவனைப் பார்த்து, "சிறுவனே! நாங்கள் இந்நாணயங்களை எடுத்துக் கொண்டுவிடுவோம் என்று உனக்கு அச்சமாக இல்லையா?" என்று கேட்டான்.

"எடுத்துக்கொள்ளுங்கள். ஆனால் நாணயங்களைக் காப்பாற்றுவதற்காக நான் பொய் சொல்ல மாட்டேன்," என்று சிறுவன் பதில் கூறினன்.

தலைவன் மீண்டும், நான் இவற்றை எடுத்துக் கொண்டு விட்டால், நீ பணமில்லாமல் மிகவும் துன்புறு வாயே! பொய் சொல்லியிருந்தால் இவற்றைக் காப்பாற்றி யிருக்கலாமே," என்ருன்.

சிறுவன், "நீர் கூறுவது சரிதான். எப்போதும் உண் மையே பேசவேண்டும், என்பது கடவுளின் கட்டளை. என் தாய் சிறுவயதிலிருந்தே எனக்குக் கற்றுக்கொடுத்த பாடம் 'எப்போதும் உண்மையே பேசு' என்பதுதான். புறப்படும் தருணத்தில் என்னிடம் வாக்குறுதி வேறு வாங்கிக்கொண் டிருக்கிருர்கள். பொன் நாணயங்களுக்காகப் பொய் சொல் வது கிடக்கட்டும். நீர் என் உயிரையே வாங்குவதாயிருந்தா லும் சரி, நான் பொய் சொல்லமாட்டேன்," என்று கூறினன்.

இதைக் கேட்ட திருடர் தலைவனின் மனம் மாறியது. சிறுவனின் நாணயங்களையும் மற்றும் வணிகர்களின் பொருள்களையும் அவரவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டு, அவன், "நானும் இன்ருேடு என் கொள்ளைத் தொழிலை விட்டுவிட்டேன். இனி வாழ்நாள் முழுதும் நல்ல காரியங் களையே செய்வேன்," என்று சிறுவனிடம் கூறினன்.

சிறுவனின் நல்ல நடத்தையால் திருடனும் திருந்தி நல்லவனுகி விட்டான்.

கூட்டத்தார்	விட்டுவிடு	கொள்ளைத்தொழில்	வணிகர்
காரியங்கள்	அறிவுரை	இளைப்பாறினர்	அச்சம்
உறுதியாக	வாக்குறுதி	உயிரைவாங்கு	கவர்ந்து
வாழ்நாள்	காப்பாற்று	நம்பிக்கை	பயணம்
சோதித்தான்	கடுமையாக	விடைகொடு	தீங்கு
நேர்ந்தாலும்	வியப்புடன்	தைக்கப்பட்டு	திருந்தி
தாக்கியது	வழிச்செலவு	கிடக்கட்டும்	நடத்தை

வினுக்கள்

1. சிறுவன் பாக்தாது நகருக்கு ஏன் புறப்பட்டான்?
2. சிறுவனின் தாய் அவனுக்குக் கூறிய அறிவுரை யாது?
3. வழியில் வணிகர்களுக்கு ஏற்பட்ட துன்பம் யாது?
4. திருடர்களிடம் சிறுவன் கூறியதென்ன?
5. திருடர் தலைவனிடம் சிறுவன் கூறியதென்ன?
6. திருடர் தலைவன் மனம் மாறியதும் என்ன செய்தான்?

பயிற்சி

(1) பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச்சொற்களைக் கவனி:-

1. மாணவன் படிக்க வந்தான்.
2. படித்த மனிதன் புகழ்பெறுவான்.

வந்தான், பெறுவான் என்ற இரண்டு வினைச் சொற்களும் முடிந்த பொருளுடையவை. இவை பொருள் முடிவுபெற, வேறு எந்தச் சொல்லையும் எதிர்நோக்கவில்லை. இவை முற்று வினைகள் எனப்படும்.

படிக்க, படித்த என்ற இரண்டு சொற்களும் வினைச்சொற்களே; ஆயினும் இவை பொருள் முடிவுபெறவில்லை. இவை தம் பொருள் முடிவுபெற வேறு சொற்களை வேண்டி நிற்கின்றன. 'படிக்க' என்பது 'வந்தான்' என்ற சொல்லுடனும், 'படித்த' என்பது 'மனிதன்' என்ற சொல்லுடனும் பொருள் முடிவு பெறுவதைத் தெரிந்துகொள்ளுங்கள். இம்மாதிரியான வினைச் சொற்களுக்கு எச்ச வினைகள் என்று பெயர்.

(2) பின்வரும் வாக்கியங்களிலிருந்து முற்று வினைகளையும் எச்ச வினைகளையும் எடுத்துக்காட்டு:—

1. சாரணர் பெறும் பயிற்சி மிக்க உதவியாயிருக்கும்.
2. ஆசிரியர் எழுந்து சென்றார்.
3. படித்த புத்தகத்தை என்னிடம் கொடு.

7. பெண்கள் விடுதலைக் கும்மி

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம்பாடக்
கண்களி லேயொளி போல வுயிரில்
கலந்தொளிர் தெய்வம்நற் காப்பாமே.

கும்மியடி ; தமிழ் நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி !
நம்மைப்பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்றுகும்மியடி ! (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார். (கும்மி)

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி ; (கும்மி)

—பாரதியார்

குலுங்கிட	விந்தை	கலந்து	பாரினில்
தலைகவிழ்	ஒளிர்	காப்பு	விடுதலை
தெய்வம்	ஏட்டை	கைகொட்டி	களிப்பு

அருஞ்சொற்பொருள்

ஒளிர் - பிரகாசிக்கின்ற. ஏடு - புத்தகம். மாய்ந்து - செத்து. விந்தை-அதிசயம். தலைகவிழ்-தலைசாய். பட்டம்-பதவி. பாரினில்-பூமியில். இளைப்பில்லை-குறைவு இல்லை. காப்பு-பாதுகாவல்.

வினாக்கள்

1. 'நம்மைப் பிடித்த பிசாசுகள்' என்று பெண்கள் குறிப்பிடுவது எவற்றை?

2. எவர் மாய்ந்துவிட்டார்? எவர் தலைகவிழ்ந்தார்?

3. எவ்விஷயங்களில் ஆண்களுக்குப் பெண்கள் இளைப்பில்லாதவர்?

8. மரியாதை இராமனின் மதி நுட்பம்

ஒரு சோழ அரசன் காலத்தில் ஓர் ஊரில் மரியாதை இராமன் என்ற நீதிபதி இருந்தார். அவருடைய அரிய தீர்ப்புக்கள் நாடெங்கும் பரவின. ஒருநாள் அவரது நீதி மன்றத்திற்கு வியாபாரி ஒருவன் வழக்குடன் வந்தான்.

"நீதிபதியவர்களே! இந்தக் கந்தன் என்ற குடியானவன், தன் வயலைப் பழுதுபார்ப்பதற்காகச் செலவுக்கு நூறு வராகன் கடன் கேட்டான். கடன் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டு கடன் கொடுத்தேன். குறிப்பிட்ட தவணை வந்ததும் கடனைத் தரும்படி கந்தனைக் கேட்டேன். அவன் மறு நாள் காலை என்னைத் தனது வயலுக்குப் பத்திரத்தோடு வந்து வட்டியும் முதலுமாக வாங்கிப்போகும்படி சொன்னான். அப்படியே போனேன். கடனைத் தராமல் என் கையிலிருந்த பத்திரத்தை வாங்கிச் சுக்குச் சுக்காகக் கிழித்தெரிந்து விட்டான்," என்று வியாபாரி முறையிட்டான்.

இராமன், "கந்தா! இவர் கூறியது உண்மைதானா?" என்று கேட்டார். கந்தன், "ஐயா! நான் கடன் வாங்கினால் தானே கடன் பத்திரத்தைக் கிழித்திருப்பதற்கு? கடன் வாங்கவும் இல்லை; கடன் பத்திரத்தைக் கிழித்து எரியவும் இல்லை," என்று மறுத்தான். இராமன் சிறிது ஆலோசித்தார். பிறகு, "இந்த வழக்கை நாளைக்கு விசாரிக்கிறேன்," என்று சொல்லி எழுந்தார். நீதிமன்றம் கலைந்தது.

இராமன் வியாபாரியைத் தனியாகக் கூப்பிட்டு, "கடன் பத்திரத்தின் நீளம் என்ன?" என்று கேட்டார். வியாபாரி "அது சாண் நீளம் இருந்தது," என்றான்.

"நாளை நான் நீதிமன்றத்தில் கேட்கும்போது ஒரு முழ நீளம் இருந்தது என்று சொல்லவேண்டும்," என்று இராமன் சொன்னார். வியாபாரி உடன்பட்டான். மறு நாள் மன்றம் கூடியது.

இராமன் வியாபாரியை நோக்கி, "வணிகரே! கடன் பத்திரம் எவ்வளவு நீளமுள்ளது?" என்று கேட்டார்.

"ஐயா! அது ஒரு முழ நீளம் உள்ளது; அதைக் கந்தன் கிழித்துவிட்டான்," என்று வியாபாரி கூறினன்.

இதைக் கேட்ட கந்தன் ஆத்திரம் அடைந்தான். "ஐயா! இது அடுக்காது; வியாபாரி சொல்வது பொய்; சாண் நீளமே இருந்த பத்திரத்தை முழு நீளம் என்று வீண் பொய் கூறுகிறுர்," என்று கூச்சலிட்டான்.

அப்போது இராமன், "கந்தா! வணிகரிடம் கடன் வாங்கவில்லையானல் சாண் நீளம் பத்திரம் இருந்தது என்று எப்படிச் சொல்ல முடியும்? பத்திரம் எழுதித் தந்து கடன் வாங்கிவிட்டு, இல்லையென்று பொய் சொல்வது நீதான்! நீயே ஒப்புக்கொண்டுவிட்டாய்!" என்ருர்.

கந்தன் வெட்கத்தால் தலைகுனிந்தான்.

இராமன், "கந்தா! வணிகருக்கு வட்டியும் முதலு மாகத் திருப்பித் தரவேண்டும். கடன் பத்திரத்தைக் கிழித்த தால் மூன்று மாதச் சிறையும், நீதிமன்றத்தில் பொய் கூறிய தால் ஐம்பது வராகன் அபராதமும் உனக்கு தண்டனை விதிக்கிறேன்," என்று தீர்ப்பளித்தார்.

வியாபாரி இராமனை வாழ்த்திக்கொண்டே சென்ருர்.

பழுதுபார்	முறையிடு	வீண்	சிறை
நீதிமன்றம்	பத்திரம்	முழம்	தலைகுனி
மறுத்தான்	உடன்படு	கூச்சலிடு	மரியாதை
தீர்ப்பு	கடன்	சாண்	வெட்கம்
தண்டனை	தவணை	ஆத்திரம்	வட்டி
மதிநுட்பம்	சுக்குச்சுக்காக	அடுக்காது	முதல்
வராகன்	விசாரி	ஒப்புக்கொள்	அபராதம்

வினுக்கள்

1. வியாபாரி கூறிய வழக்கு என்ன?
2. மரியாதை இராமன் வியாபாரியிடம் தனிமையில் கூறிய தென்ன?
3. மறுநாள் நீதிமன்றத்தில் குடியானவன் கூறிய பதில் என்ன?
4. நீதிபதி குடியானவன் குற்றவாளி என்பதை எப்படி நிரூபித் தார்?
5. குடியானவனுக்கு என்ன தண்டனை விதிக்கப்பட்டது?

பயிற்சி

(1) வினை முற்றுக்களுக்குக் காலம் உண்டு. தொழில் நடந்து முடிந்துவிட்டால், அது இறந்த காலம் எனப்படும்.

(உ-ம்) 1. ஆசிரியர் கற்பித்தார்.
2. மாடு புல் மேய்ந்தது.

தொழில் இப்பொழுது நடந்து கொண்டிருப்பது நிகழ் காலம் எனப்படும்.

(உ-ம்) 1. பயிர் தழைக்கிறது.
2. சூரியன் ஒளி தருகிறான்.

தொழில் இனி நடக்கப்போவதைத் தெரிவிப்பது எதிர்காலம் ஆகும்.

(உ-ம்) 1. நான் நாளை பட்டினி இருப்பேன்.
2. நன்கு கற்றால் புகழ் பெறுவாய்.

(2) மூன்று காலங்களிலும் வினைச் சொற்கள் அமையுமாறு இரண்டிரண்டு வாக்கியங்கள் எழுது.

9. பொருட்காட்சி

(உரையாடல்)

தந்தை : இரகு! இதோ வந்துவிட்டோம் பொருட்காட்சி நடக்கும் இடத்திற்கு. நீ இங்கேயே நில். நான் போய் இரண்டு டிக்கட்டுகளை வாங்கி வருகிறேன்.

இரகு : இதென்ன அப்பா ! ஒரே கூட்டமாயிருக்கிறதே !

தந்தை : அப்படித்தானிருக்கும். நம்மைப் போலவே எல்லோரும் இக் காட்சியைக் காண வந்திருக்கிறார்கள். இதில் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய செய்திகள் பல இருக்கின்றன.

இரகு : அப்பா! இங்கே நாம் தெரிந்துகொள்வதற்கு என்ன இருக்கிறது ?

தந்தை : இதோ, இங்கே வா! இந்தக் கடையைப் பார்.

இரகு : இது வளையல் கடை. இதில் சிறப்பாக ஏதும் தெரியவில்லையே !

தந்தை : கடை என்னவோ வளையல் கடைதான். ஆனால் இங்கே வளையல்கள் எப்படிச் செய்யப்படுகின்றன என்று காட்டுகிறார்கள், பார்.

இரகு : இந்த உலையிலா வளையல் செய்கிறார்கள் ?

தந்தை : ஆம். இதோ பார். இந்த உலையினுள்ளே உருகியிருக்கும் கண்ணாடியிலிருந்து சற்றுத் தடித்த கம்பி போல இழுக்கிறார்கள். இந்தக் கம்பியை வட்டமாக வைத்துக் குளிரச் செய்தால் ஒரு வளையல் ஆகிவிடுகிறது.

இரகு : இங்கே என்ன செய்கிறார்கள் ?

தந்தை : இங்கே தேனீ வளர்த்தலைச் செய்துகாட்டுகிறார்கள். இதோ, இந்த மரப்பெட்டிதான் தேனீக்களின் கூடு. சில தேனீக்கள் உள்ளே செல்கின்றன. சில தேனீக்கள் வெளியே வருகின்றன, பார்.

இரகு : தேனீக்கள் கொட்டிவிடுமே !

தந்தை : தேனீக்கள் தாமாகக் கொட்டுவதில்லை. அவைகளுக்குக் கோபம் மூட்டினால்தான் அவை நம்மைக் கொட்டும்.

இரகு : அப்பா! இதோ, ஒரு தனிக்கொட்டகை இருக்கிறதே, இதில் சென்று பார்ப்போம்.

தந்தை : இங்கே, நம் அரசினர், "உடல் நலத்தைப் பாதுகாத்துக்கொள்வது எப்படி?" என்பதைப் பல படங்கள் மூலமாகக் காட்டுகிருர்கள்.

இரகு : இந்தப் படம் எதைக் காட்டுகிறது?

தந்தை : ஒருவருக்கு முறைக்காய்ச்சல் எவ்வாறு உண்டாகிறது என்பதை இப்படம் காட்டுகிறது.

இரகு : இப் பொருட்காட்சி ஏற்படுத்தியதால், நமக்கு என்ன பயன் அப்பா?

தந்தை : நம் நாட்டின் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகும் கைத்தொழிற் சாமான்கள் என்ன என்று நாம் தெரிந்து கொள்ளலாம். நாம் உற்பத்தி செய்யும் சாமான்கள் மக்களுக்குத் தெரியுமாறு விளம்பரம் செய்யலாம். தந்தவேலை செய்தல், மரவேலை, தேனீ வளர்த்தல் போன்ற தொழில்களைப் பற்றி விவரமாக அறிந்து கொள்ளலாம்.

இரகு : ஆம், அப்பா! பொருட்காட்சியினுல் பல நன்மைகள் உண்டு என்பது இப்பொழுது புரிகிறது. இன்றைக்கு நாம் பார்க்காதவற்றை நாளைக்கு வந்து பார்க்கலாமா?

தந்தை : உனக்குக் கால் வலிக்கிறது போலிருக்கிறது சரி, நாளைக்கு மறுபடியும் வருவோம்.

பொருட்காட்சி	சாமான்	புரிகிறது	கொட்டிவிடும்
கோபமூட்டும்	பயன்	உடல்நலம்	விவரமாக
முறைக்காய்ச்சல்	உலை	பாதுகாத்து	உற்பத்தி
வளையல்	செய்தி	விளம்பரம்	அரசினர்
கொட்டகை			

வினுக்கள்

1. இரகுவும் அவன் தந்தையும் பார்த்த பொருட்காட்சியில் என்ன என்ன கைத்தொழில்கள் செய்து காட்டப்பட்டன?

2. தந்தச் சாமான்களும் மரச்சாமான்களும் செய்யும் கைத்தொழில்கள் மைசூரில் அதிகமிருப்பது ஏன் ?

3. பொருட்காட்சி நடத்துவதால் ஏற்படும் நற்பயன்கள் என்ன ?

பயிற்சி

(1) பொருள் கூறு:— உலை; புரிகிறது; பாதுகாத்து.

(2) சொற்களைச் சேர்த்து எழுது:—

பொருள் + காட்சி = பொருட்காட்சி
அருள் + கலை =
விரல் + கடை =

(3) எச்சவினை என்றால் என்ன என்பதை நீங்கள் படித்தீர்கள். எச்சவினைகளில் இருவகை உண்டு. பின்வருபவைகளைக் கவனி:-

1. படித்த பாடம் மறந்து விட்டது.
2. சீறும் பாம்பைக் கண்டால் பயமாயிருக்கும்.
3. நண்பன் புசித்துச் சென்றான்.
4. நான் அவனைப் பார்க்கச் சென்றேன்.

'படித்த' என்ற எச்சவினை 'பாடம்' என்ற பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகிறது. 'சீறும்' என்ற எச்சவினை 'பாம்பு' என்ற பெயர்ச் சொல்லைக்கொண்டு முடிகிறது. ஆகையால் இவை இரண்டும் பெயரெச்சங்கள் ஆகும்.

'புசித்து' என்ற எச்சவினை 'சென்றான்' என்ற வினைச் சொல்லையும் பார்க்க என்ற எச்சவினை 'சென்றேன்' என்ற வினைச் சொல்லையும் கொண்டு முடிகின்றன. எனவே, இவை வினையெச்சங்கள் எனப்படும்.

(4) இப் பாடத்திலிருந்து பெயரெச்சங்களுக்கும் வினையெச்சங்களுக்கும் இரண்டிரண்டு எடுத்துக்காட்டுகள் எழுதுக.



10. சைக்கிள்

தங்கையே பார்! தங்கையே பார்!
சைக்கிள் வண்டி இதுவே பார்! 1
சிங்காரமான வண்டி
சீமையிலே செய்த வண்டி. 2
இரும்பாலே செய்த வண்டி
எங்கெங்கும் ஓடும் வண்டி. 3
மாடில்லை குதிரையில்லை
மாயமதாய்ப் பறந்திடும் பார். 4
தீயில்லை புகையுமில்லை
தீவிரமாய்ச் சென்றிடும் பார். 5
காலாலே மிதிப்பதனுல்
கடும் விசையில் போயிடும் பார். 6
ஒன்றன்பின் ஒன்ருக
உருளும் பைதாக்களைப் பார். 7
அக்காளும் தங்கையும் போல்
அவைபோகும் அழகைப் பார். 8

—தேசிகவிநாயகம் பிள்ளை

விசை	மாயம்	உருளும்	சிங்காரம்
சீமை	பைதா	தீவிரமாய்	மிதிப்பதனுல்

அருஞ்சொற்பொருள்

சிங்காரமான – அழகான. தீவிரமாய் – வேகமாக. பைதாக்கள் – சக்கரங்கள்.

வினு

இச்செய்யுளைத் தழுவி, சைக்கிள் வண்டியைப் பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.

11. அரசரைக் கண்டுபிடித்த அப்பாஜி

தில்லியைத் தலைநகராகக்கொண்டு வட நாட்டில் மொகலாய அரசர் ஆட்சி புரிந்துவந்தார். மொகலாய அரசரைப் பாதுஷா என்று சொல்லுவார்கள்.

விஜயநகர அரசரான கிருஷ்ணதேவ ராயருக்கு அறிவிற் சிறந்த அப்பாஜி அமைச்சராக இருந்தார். பாதுஷா, அப்பாஜியின் அறிவை மெச்சி, தில்லிக்கு அவரை வர

வழைக்க நினைத்தார். எனவே, அவர் கிருஷ்ணதேவ ராயருக்கு, அப்பாஜியை தில்லிக்கு அனுப்பவேண்டுமென்று, ஒரு வேண்டுகோள் விடுத்தார். அப்பாஜியை அனுப்ப, ராயரும் இசைந்தார்.

அப்பாஜி தில்லிக்கு வரும் நாள் குறிக்கப்பட்டது. சபையில் அவரை வரவேற்க ஏற்பாடுகள் நடந்தன. பாதுஷா, அப்பாஜியைச் சோதிக்க வேண்டும் என்று எண்ணினர். உடனே தமது அமைச்சர்களில் ஒருவரைப்போல அவர் வேடம் பூண்டு, அமைச்சர்களில் ஒருவராகப்போய் உட்கார்ந்துகொண்டார். தம் அரியணையில் வேறு ஒருவருக்குப் பாதுஷா வேடம்போட்டு உட்காரவைத்தார்.

அப்பாஜி ஆரவாரத்துக்கிடையே அரச சபைக்குள் நுழைந்து, ஒரு தடவை சபையிலிருந்தவர்களைப் பார்த்தார். பிறகு அரியணையில் இருந்தவரை நோக்கிச் செல்லாமல், நேராக அமைச்சர் உட்கார்ந்திருந்த இடத்திற்குப் போனார்; அமைச்சர் வேடம் தாங்கி அமர்ந்திருந்த பாதுஷாவை வணங்கினார். இதைக் கண்ட பாதுஷா மிக்க வியப்படைந்தார்; மகிழ்ச்சியும் கொண்டார்.

அப்பாஜியிடம், "தாங்கள் இதற்குமுன் என்னைப் பார்த்ததில்லையே! நான்தான் அரசர் என்று எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?" என்று பாதுஷா கேட்டார்.

அதற்கு அப்பாஜி, "பாதுஷா இதில் என்ன வியப்பு உள்ளது? தாமரைப் பூக்கள் எல்லாம் கதிரவனையே பார்க்கின்றன அல்லவா? அதைப்போல, சபையோர் யாவரும் மிகப் பணிவோடும் அன்போடும் உங்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதைச் சபைக்குள் நுழைந்ததும் நான் கண்டுகொண்டேன்," என்று அப்பாஜி பதிலளித்தார்.

பாதுஷா அப்பாஜியின் அறிவைப் போற்றினார். அவருக்கு அன்போடு பல பரிசுகளை வழங்கித் தென்னாட்டிற்கு விடைகொடுத்து அனுப்பினார்.

பாதுஷா தம் சபையோரைப் பார்த்து, "சபையோர்களே! அறிவிற் சிறந்த அப்பாஜியைப் போன்றவர்கள் விஜயநகரத்தில் இருப்பதால்தான் கிருஷ்ணதேவராயர் சுதந்திரமுள்ள மன்னராக விளங்குகிறார். அப்பாஜியால்தான் தென்னாட்டிற்குப் பெருமை! அந்த நாடு தில்லி அரசுக்கு ஒரு நாளும் கப்பம் கட்டி அடிமையாகாது!" என்று கூறினார்.

பணிவோடு	மொகலாய	வழங்கி
இசைந்தார்	ஆரவாரம்	போற்று
வரவழை	அரியணை	கதிரவன்
மெச்சி	வரவேற்க	நோக்கி
பாதுஷா	பெருமை	வேடம்பூண்டு
கப்பம்	அமைச்சர்	நுழைந்து
கண்டுபிடி	கண்டுகொள்	வேண்டுகோள்

வினுக்கள்

1. மொகலாய அரசருக்கு வழங்கிய பெயர் யாது?

2. தில்லிக்கு அப்பாஜியை வரவழைக்கப் பாதுஷா ஏன் நினைத்தார்?

3. பாதுஷாவின் சபையில் அப்பாஜி நுழைந்தபொழுது பாதுஷா எங்கிருந்தார்? அரியணையில் இருந்தவர் யார்?

4. அப்பாஜி உண்மையான பாதுஷாவை எவ்வாறு கண்டுபிடித்தார்?

பயிற்சி

(1) பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு, உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி :—

1. அழி, அளி. 2. தனி, தணி, 3. எரி, எறி. 4. மரி, மறி. 5. பரி, பறி. 6. வழி, வலி.

(2) பின்வரும் வாக்கியங்களில் வரும் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எடுத்தெழுது :—

1. நான் செல்வேன்.
2. அந்தப் பனையோலையை எடுத்து வா.
3. நானும் ஒரு பாய் பின்னுகிறேன்.

(3) மேலே காட்டிய வாக்கியங்களில், செல்வேன் என்ற பயனிலைக்குச் செயப்படுபொருள் இல்லை. ஆகையால் செல்வேன் என்பதற்குச் செயப்படு பொருள் குன்றிய வினை என்று பெயர். எடுத்து வா என்ற வினைக்குப் பனையோலையை என்பது செயப்படு பொருள். பின்னுகிறேன் என்ற வினைக்குப் பாய் என்பது செயப்படுபொருள். ஆகவே எடுத்து வா, பின்னுகிறேன் என்ற இரண்டும் செயப்படுபொருள் குன்றாவினைகள் எனப்படும்.

(4) இப் பாடத்திலிருந்து செயப்படுபொருள் குன்றிய வினைக்கு மூன்று உதாரணங்களும் குன்றாவினைக்கு மூன்று உதாரணங்களும் தருக.

12. கடல்

எல்லை அறியாப் பெருங்கடலே !—நீதான்
இரவும் உறங்காயோ ? கடலே !
அல்லும் பகலும் அலைகடலே !—உனக்(கு)
அலுப்பும் இலையோ ? கருங்கடலே !
ஓடம் எடுத்தெறியும் கடலே !—தயை
உனக்குச் சற்றிலையோ ? கடலே !
ஆடல் வீடிதனைக் கடலே !—நீயும்
அழிப்ப தழகாமோ ? கடலே !
மலையை வயிற்றடக்கும் கடலே !—எண்ணில்
மகர மீனுலவும் கடலே !
விலைகொள் முத்தளிக்கும் கடலே !—சிப்பி
விளையா டற்குதவும் கடலே !

—தேசிக விநாயகம் பிள்ளை

அல்லும்	அலுப்பு	ஆடல் வீடு	எல்லை
விலைகொள்	மகரமீன்	சற்று	சிப்பி
வயிற்றடக்கு	உலவும்	எடுத்தெறி	தயை

அருஞ்சொற்பொருள்

அல்லும் – இரவும். அலுப்பு – களைப்பு. ஆடல்வீடு – மணலில் சிறுவர் அமைக்கும் விளையாட்டுவீடு. மகரமீன் - பெரிய சுருமீன். விலைகொள் – விலை மிகுந்த. தயை - கருணை.

[கடற் கரையில் விளையாடும் சிறுமி கடலை நோக்கிக் கூறுவது போன்ற பாடல்கள்]

வினாக்கள்

1. கடலுக்கு உறக்கமும் அலுப்பும் இல்லை என்பது எப்படித் தெரிகிறது ?
2. கடலுக்குக் கருணை இல்லை என்பது ஏன் ?
3. கடலின் பெருமைகள் என்ன ?

13. கப்பலோட்டிய தமிழர்

நம் பாரத நாடு விடுதலை பெறுவதற்காகப் போரிட்ட வீரர்கள் பலராவர். மகாத்மா காந்தியடிகள் நம் விடுதலைப் போருக்குத் தலைமை தாங்குவதற்கு முன்பே, திலகர் பெருமான் 'தன்னுட்சி எனது பிறப்புரிமை' என்ற குறிக்கோளை நமக்கெல்லாம் அளித்தார். அடிமைகளாக உறங்கிக் கொண்டிருந்த இந்திய மக்களை அவர் தட்டி எழுப்பினர். அக்காலத்தில் நம் தமிழ் நாட்டிலும் சில வீரர்கள் தோன்றி நாட்டின் விடுதலை இயக்கத்தில் முழு மனத்துடன் சேர்ந்து கொண்டார்கள். அவர்களில் தலைசிறந்தவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களாவர். இவர் திலகருடைய நெருங்கிய நண்பர்களில் ஒருவர். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஓட்டப்பிடாரம் என்ற சிற்றூரே சிதம்பரம் பிள்ளையவர்கள் பிறந்த ஊராகும். இவர் 1872ஆம் ஆண்டில் உலகநாதம் பிள்ளைக்கும் பிரமாயி அம்மைக்கும் புதல்வராகப் பிறந்தார்.

இளமையில் சிதம்பரம் பிள்ளை நன்கு கல்வி கற்ருர். நாட்டு விடுதலையில் அவருக்கிருந்த ஆர்வம் அக்காலத்திலேயே வெளிப்பட்டது. மெட்ரிக்குலேஷன் படிப்பு முடிந்ததும், அரசாங்க ஊழியத்தை அவர் விரும்பாமல், வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். ஏழைகளிடம் அவருக்குக் கரைகடந்த அன்பிருந்தது. ஆகவே ஏழைகளிடம் பணம் பெருமல் அவர்கள் கட்சியை எடுத்துரைப்பது அவர் வழக்கம்.

நம் நாட்டு விடுதலை இயக்கம் தொடங்கியதும் சிதம்பரம் பிள்ளை அதில் சேர்ந்து உழைக்க முன்வந்தார். தமிழ்

நாட்டில் மக்களிடையே நாட்டு விடுதலையைப் பற்றிப் பேசினர். ஆங்கிலேயரின் ஆட்சியை வேரறுக்க, சுதேசி இயக்கமே சிறந்த துணையாகும் என்று அப்பொழுது தலைவர்கள் சொற்பொழிவு ஆற்றினர்கள். அயல் நாட்டுப் பொருள்களை வாங்காமல் நம் நாட்டுப் பொருள்களையே வாங்கி உபயோகிக்க வேண்டுமென்பது இந்த இயக்கத்தின் கருத்து. சிதம்பரம் பிள்ளை போன்ற தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்ட நம் நாட்டு மக்கள் அயல் நாட்டுத் துணிகளை எரித்தனர்; சுதேசி சாமான்களையே வாங்க உறுதிகொண்டனர். அப்பொழுது சிதம்பரம் பிள்ளையுடன் உழைத்த மற்றொரு தமிழ் நாட்டுத் தலைவர் சுப்பிரமணிய சிவா என்பவராவர்.

நம் நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்குச் செல்லும் வாணிகக் கப்பல்கள் எல்லாம் ஆங்கிலேய முதலாளிகளுக்கே சொந்தமாயிருந்தன. இதைக் கண்ட சிதம்பரம் பிள்ளையின் மனம் கொதித்தது. பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டு வணிகர், கப்பல்களில் கடல்கடந்துசென்று, சிங்களம், பர்மா, ஜாவா முதலிய நாடுகளுடன் வியாபாரம் செய்தார்கள். இத்தகைய பண்டைப் பெருமையையுடைய தமிழ் மக்கள் இப்பொழுது தமக்கென்று கப்பல்களே இல்லாதிருந்தனர்; இந்நிலைமையை மாற்ற வேண்டுமென்று சிதம்பரம் பிள்ளை உறுதி பூண்டார். பல செல்வர்களிடம் இதைப் பற்றிப் பேசி, அவர்களுடைய உதவியும் பொருளும் பெற்று "சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி" என்ற ஒரு கப்பல் கம்பெனியைத் தொடங்கினர். ஒரு கப்பலை விலைக்கு வாங்கி, அதைத் தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே ஓட்டினர். இதைப் பார்த்த ஆங்கிலக் கப்பல் முதலாளிகள் இவருடன் போட்டியிட்டார்கள். சுதேசிக் கப்பல் கம்பெனி சுமார் இரண்டு ஆண்டுக் காலம் நடந்தது; பிறகு போட்டி காரணமாக அது நின்று விட்டது. ஆயினும் சிதம்பரம் பிள்ளைக்கு, 'கப்பலோட்டிய தமிழன்' என்று பெயர் ஏற்பட்டது.

ஒரு தடவை அரசாங்கத்தாருடைய தடையை மீறி சிதம்பரம் பிள்ளையும் இவருடைய நண்பர் சுப்பிரமணிய சிவா

வும் ஒரு கூட்டத்தில் பேசினுர்கள். அதனுல் இருவரும் கைதுசெய்யப்பட்டார்கள். பிறகு அவர்கள் விசாரணை செய்யப்பட்டுப் பல ஆண்டுகளுக்குக் கடுங்காவல் தண்டனை பெற்றனர்.

சிறையில் அவர் அனுபவித்த இன்னல்கள் காரணமாக, அவரது உடல் நலம் குன்றிவிட்டது. அவர் சிறையிலிருந்து வெளிவந்த பிறகு சென்னையில் பல ஆண்டுகள் வாழ்ந்துவந்தார்; அப்பொழுது சில தமிழ் நூல்களைப் பதிப்பித்து, தமிழ் இலக்கியத் தொண்டு செய்தார். காந்தியடிகள் தொடங்கிய அறப்போரில் ஈடுபட அவரது உடல் நலம் இடந்தரவில்லை. ஆனுல் அவரது மனம் மட்டும் நம் நாடு விடுதலை பெறவேண்டுமென்று இடையருது எண்ணிக் கொண்டிருந்தது. 1936ஆம் ஆண்டில் இப்பெருவீரர் மண்ணுலக வாழ்வை நீத்தார். சிதம்பரம் பிள்ளை போன்ற தியாகிகளைப் பின்பற்றி நாமும் நமது நாட்டு நலனுக்காக உழைக்க முன்வர வேண்டும்.

ஆற்றினுர்	இலக்கிய	சொற்பொழிவு	நலன்
தொண்டு	நீத்தார்	வேரறுக்க	இயக்கம்
வழக்கறிஞர்	தலைமைதாங்கு	குன்றிவிட்டது	தியாகி
கடுங்காவல்	குறிக்கோள்	அனுபவித்த	மீறி
கைதுசெய்	சுதேசி	இன்னல்	போட்டியிடு
நெருங்கிய	தலைசிறந்த	பதிப்பித்து	இடையருது
ஆர்வம்	ஊழியம்	பூண்டார்	அறப்போர்
இடந்தர	கரைகடந்த	மேற்கொள்	எடுத்துரை

அருஞ்சொற்பொருள்

தலைமை தாங்கு – தலைவனுயிரு. இன்னல் – துன்பம். நீத்தார் – துறந்தார். குன்றிவிட்டது – குறைந்து விட்டது. பண்டைப் பெருமை – பழங்காலப் பெருமை. இடையருது – நீங்காது. தொண்டு – பணி.

வினுக்கள்

1. சிதம்பரம் பிள்ளையவர்களது பிறந்த ஊர் எது? பெற்ருேர் யாவர்?

2. சிதம்பரம் பிள்ளை எவ்வாறு வழக்கறிஞர் தொழிலைச்செய்தார்?

3. சிதம்பரம் பிள்ளைக்குக் 'கப்பலோட்டிய தமிழன்' என்ற பெயர் எப்படிக் கிடைத்தது?

4. சிதம்பரம் பிள்ளை எப்பொழுது சிறைப்பட்டார்?

பயிற்சி

(1) உன் சொந்த வாக்கியங்களில் பின்வரும் வார்த்தைகளை அமைத்து எழுது :—

தலைமை தாங்கு ; விசாரணை ; தொண்டு ; குன்றிவிட்டது ; இடையருது.

குறிகள்

(2) நிறுத்தக்குறிகள் :

(,) இந்த அடையாளம் கால்புள்ளி எனப்படும். படிக்கும் போது இந்தக் குறி இருக்குமிடத்தில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(உ-ம்) பால், சோறு, எலி முதலியவற்றைப் பூனை தின்னும்.

(.) இது முற்றுப்புள்ளி எனப்படும். ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் இது காணப்படும். படிக்கும்போது இந்தக்குறியிட்ட இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(உ-ம்) பறவைகள் வானத்தில் பறக்கின்றன. தவளைகள் தண்ணீரில் நீந்துகின்றன.

(" ") இக்குறிகள், மேற்கோள்குறி எனப்படும். ஒருவர் எந்த வாக்கியங்களை எந்த விதமாய்க் கூறினரோ, அந்த வாக்கியங்கள் அப்படியே உபயோகிக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிக்கும் இடங்களில், முதலிலும் முடிவிலும் இக் குறிகள் இடப்படும்.

(உ-ம்) வனதேவதை அவன் முன் தோன்றி, "நீ இன்பமாய் வாழ்வாயாக," என்று கூறியது.

(' ') இக்குறியும் மேற்கோள் குறிதான். ஆனால் இது பழமொழியையும், பிற மொழி வார்த்தைகளையும் குறிக்கிற இடங்களில், அவைகளின் முதலிலும் முடிவிலும் உபயோகிக்கப்படும்.

(உ-ம்) 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று பெரியோர் கூறியிருக்கின்றனர்.

நாம் உணவில் சேர்க்கின்ற உப்பு, 'சோடியம் குளோரைடு' எனப்படும்.

(3) பின்வரும் வாக்கியத்தில் தகுந்த நிறுத்தக் குறிகளை யிடு :—

சிதம்பரம் பிள்ளை சுப்பிரமணிய சிவா பாரதியார் முதலியோர் தமிழ் நாட்டில் மக்களிடையே சுதந்திர ஆர்வத்தைத் தூண்டினர் அவர்கள் நம் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டனர்.

14. குதிரை அடிமையான கதை

பண்டைக் காலத்தில் குதிரைகள் காடுகளில் தம் விருப்பம்போல் திரிந்து கொண்டிருந்தன. அவற்றை அடக்கி வண்டிகளில் பூட்டவும் அவற்றின்மீது ஏறிச்செலுத்தவும் மனிதன் அப்பொழுது கற்கவில்லை.

ஒரு காட்டைச் சார்ந்த புல்வெளியில் ஒரு குதிரை மேய்வது வழக்கம். அப்புல்வெளி தனக்கே உரியது என்று



அக்குதிரை கருதியது. ஒரு நாள் அங்கு வந்த கலைமான் ஒன்று, செழிப்பாயிருந்த புல்லை ஆவலுடன் மேயத் தொடங்கியது. இதைக் கண்ணுற்ற குதிரை பொறாமை கொண்டு, மானைத் துரத்த எண்ணி, அதனருகே சென்று, அதைக் கால்களால் உதைத்தும் பற்களால் கடித்தும் துன்புறுத்தியது. மானும் தற்காப்பு முயற்சியில் தன் கொம்புகளால் குதிரையைக் குத்திக் காயப்படுத்தியது.

மானைத் துரத்த முடியாது தோல்வியுற்ற குதிரை பின் வாங்கிச்சென்று, "வேறு ஒருவருடைய உதவியைப் பெற்று இதை இங்கிருந்து ஓட்டவேண்டும்," என்று நினைத்தது. அத்தருணம் அவ்வழியே ஒரு மனிதன் சென்றான். குதிரை அவனை அணுகி, "ஐயனே! இந்த மான் எனது நிலத்தில் புகுந்து எனக்கே உரிய புல்லை எல்லாம் தின்கின்றது.

இதைத் துரத்த எனக்குத் துணை செய்வீர்களா ? " என்று வினவியது.

அம்மனிதன் குதிரையை உற்றுநோக்கினன் ; அழகிய தோற்றமும் நல்ல உடல் வலிமையும் விரைவாக ஓடக்கூடிய இயல்பும் பெற்ற அவ்விலங்கு தனக்கு ஏற்ற ஓர் ஊர்தியாகு மெனக் கருதினன். அவன் குதிரையை நோக்கி, " இந்த மானை ஓட்டுவது எளிது. ஆனல் என்சொற்படி நீ கேட்க



வேண்டும். உன் வாயில் ஒரு கடிவாளத்தைக் கொடுத்து வார்களால் பிணைத்து என் கையில் பிடித்துக்கொண்டு உன் மீது ஏறி அமர்ந்துகொள்வேன். பிறகு நான் மானைத் துரத் திக் கொன்று விடுகிறேன், " என்று கூறினன்.

குதிரை மனிதன் சொற்படி நடக்க இசைந்தது. அவன் ஓர் இரும்புத் துண்டைக் குதிரையின் வாயில் கொடுத்து வார்களைப் பிணைத்துத் தன் கையில் பிடித்துக் கொண்டான். பிறகு அதன்மீது ஏறி அமர்ந்து மானை நோக் கிச் செலுத்தினன். மான் பயந்து ஓடியது. குதிரைமீதமர்ந்த மனிதன் அதை விடாது துரத்தி வேட்டையாடிக் கொன்ருன். ஆனல் அன்று முதல் குதிரை மனிதனுக்கு அடிமையாகி விட்டது.

திரிந்து	சார்ந்த	தற்காப்பு	வினவியது
பொருமை	உரியது	முயற்சி	காயப்படுத்து
தோற்றம்	ஊர்தி	கலைமான்	உதைத்து
தருணம்	வார்	வழக்கம்	அமர்ந்துகொள்
கடிவாளம்	விலங்கு	துணை செய்	வேட்டையாடு
பிணைத்து	கண்ணுற்ற	பின் வாங்கி	அடக்கி
கருதியது	மேய்வது	துரத்தி	உற்றுநோக்கு

வினாக்கள்

1. குதிரை தன் புல்வெளியில் மேய்ந்த மானை என்ன செய்தது? மான் என்ன செய்தது?
2. குதிரை மனிதனிடம் என்ன கூறியது?
3. மனிதன் குதிரையிடம் என்ன கூறினான்?
4. மனிதன் குதிரையின்மீது எவ்வாறு ஏறி அமர்ந்தான்?
5. மனிதன் மானை என்ன செய்தான்?
6. குதிரை ஏன் மனிதனுக்கு அடிமையாகியது?

பயிற்சி

(1) பின்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி:—

விருப்பம், சார்ந்த, துன்புறுத்து, பின்வாங்கு, ஊர்தி, துணை செய்.

(2) பின்வரும் வாக்கியங்களிலிருந்து, பெயர்ச் சொல், வினை முற்று, வினையெச்சம், பெயரெச்சம் இவற்றிற்கு எடுத்துக் காட்டுகள் கூறு:—

1. ஒருநாள் அங்கு வந்த கலைமான் ஒன்று, செழிப்பாயிருந்த புல்லை ஆவலுடன் மேயத் தொடங்கியது.

2. மானைத் துரத்த முடியாது தோல்வியுற்ற குதிரை பின் வாங்கிச் சென்றது.

15. சாரணர் நோக்கம்

(காலாட்படை நடை மெட்டு)

சேவை செய்ய ஆவல் கொண்ட
    சிறிய வீரர் யாம்!
சீர்சிறந்த பாரதத்தாய் தீர மக்கள் யாம்!
சித்தமும் நித்தமே செப்பும் சொல்லுமே
செய்கை யாவும் ஒன்றே எங்கள்
    சேவை வெல்லுமே!
திண்மை — உண்மை — வண்மையே
தேசத்தொண்டு ஆசை கொண்டு
    செய்வம் நன்மையே! (சேவை)

— வி. சு. நடராஜன்

சேவை	ஆவல்	தீரமக்கள்	செய்கை
சித்தம்	நித்தம்	திண்மை	பாரதத்தாய்
வண்மை	செப்பு	வெல்லும்	சீர்சிறந்த

பயிற்சி

சாரணச் சிறுவரின் சேவை பற்றி நாலைந்து வரிகள் எழுது.

16. தபால் முறையின் வளர்ச்சி

சேகர் : ஐயா! தபால் முறை வளர்ச்சியடைந்துள்ளது என்கிறீர்களே. அதன் பொருள் எனக்கு விளங்கவில்லையே!

ஆசிரியர் : அப்படிக்கேள், சொல்கிறேன். நூறு ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் ஏறத்தாழ 700 தபால் நிலையங்களே இருந்தன. 1870இல் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள எல்லா ஊர்களிலும் தபால் நிலையங்கள் ஏற்பட்டன. 1947ஆம் ஆண்டில் சுமார் 22,000 தபால் நிலையங்கள் இருந்தன. இப்பொழுது ஏறத்தாழ 46,000 தபால் நிலையங்கள் ஏற்பட்டுள்ளன.

சேகர் : நாற்பத்தாறுயிரமா!

ஆசிரியர் : ஆம். இப்பொழுது நம் அரசினர் சிற்றூர்களிலெல்லாம் தபால் நிலையங்கள் நிறுவி வருகிறார்கள்.

சேகர் : இன்னும் என்ன விதமான வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன ?

ஆசிரியர் : முன்பெல்லாம் ஓரிடத்திலிருப்பவர் அயலூரில் இருப்பவருக்குப் பணம் அனுப்ப வேண்டுமானால் அரசினர் கருவூலத்தில் தான் பணத்தைக் கட்டவேண்டும். 1880ஆம் ஆண்டில் தபால் நிலையங்களில் ‘பணம் அனுப்புதல் முறை’ ஏற்பாடு செய்யப்பட்டது. மக்கள் சிறு தொகைகளைச் சேமித்து வைத்துக்கொள்ள வசதி அளிப்பதற்கு, ‘சேமிப்பு நிதிகள்’ ஏற்படுத்தப்பட்டன. தந்தி முறையில் செய்தி அனுப்புவதையும் தபால் நிலையங்கள் செய்யத் தொடங்கின.

சேகர் : ஐயா! இப்பொழுது சென்னைத் தபால் நிலையத்தில் ஒரு கடிதம் போட்டால் அது தில்லிக்கு எப்பொழுது போய்ச் சேரும் ?

ஆசிரியர் : இப்பொழுதெல்லாம் கடிதங்கள் ஆகாய விமானங்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆகையால் இன்று சென்னைத் தபால் நிலையத்தில் நீ போடும் கடிதம் நாளைக்கே தில்லிக்குச் சென்றுவிடுகிறது. எங்கெல்லாம் ஆகாய விமானங்கள் செல்கின்றனவோ, அங்கெல்லாம் தபால்களை விமானங்களே எடுத்துச் செல்கின்றன. விமானத் தபால் ஏற்படுவதற்கு முன் கடிதம் இருப்புப்பாதை வண்டியில் தில்லியை அடைய இரண்டு நாட்களாயின.

சேகர் : இருப்புப்பாதை வண்டிகளும் விமானங்களும் விரைவாகச் செல்வதால்தான், தபால்களும் விரைவில் நமக்குக் கிடைக்கின்றன. இல்லையா, ஐயா ?

ஆசிரியர் : ஆம். நம் தபால் நிலையங்கள் எவ்வளவு வளர்ச்சியடைந்துள்ளன என்பதை மற்றொரு எடுத்துக்காட்டிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். நூறு ஆண்டுகளுக்கு முன் நம் நாடு முழுவதும் இருந்த தபால் நிலையங்களில் ஓர் ஆண்டில் ஏறத்தாழ 3000 தபால்களே போடப்பட்டன. ஆனால் தற்காலத்தில் ஒவ்வொரு

நாளும் ஏறத்தாழ எழுபது இலட்சம் தபால்கள் போடப் படுகின்றன.

சேகர் : என்ன ஐயா, எழுபது இலட்சமா?

ஆசிரியர் : எழுபது இலட்சம்தான். அவற்றில் எல்லாம் ஒரே மொழியில் முகவரி எழுதப்பட்டுள்ளதா? அதுவு மில்லை. சுமார் 30 மொழிகளில் முகவரிகள் எழுதப்படு கின்றன. இவற்றையெல்லாம் படித்து உரியவரிடம் சேர்க்க எத்தனை ஊழியர்கள் இருக்க வேண்டுமென்று பார்த்துக்கொள்.

சேகர் : இப்பொழுது நம் நாட்டில் எத்தனை தபால் ஊழியர் கள் இருக்கிறார்கள், ஐயா?

ஆசிரியர் : இப்பொழுது நம் தபால் நிலையங்களில் சுமார் இரண்டரை இலட்சம் ஊழியர்கள் வேலை செய்கிறார்கள்.

சேகர் : தபால் நிலையங்கள் நமக்கு எவ்வளவு இன்றியமை யாதது என்று இப்பொழுது தெரிந்து கொண்டேன், ஐயா!

முகவரி	கருவூலம்	வசதி	தந்திமுறை
சேமித்து	நிறுவு	ஏறத்தாழ	எடுத்துக்காட்டு
உரியவர்	விமானம்	மொழி	சேமிப்புநிதி
நிலையங்கள்	விளங்க	இருப்புப்பாதை	

அருஞ்சொற்பொருள்

ஏறத்தாழ – கிட்டதட்ட. கருவூலம் – பொக்கிஷம். சேமிப்பு நிதி – மீதப்படும் பணத்தைப் போட்டுவைக்கும் நிதி.

வினாக்கள்

1. சேமிப்பு நிதி என்றால் என்ன?
2. நம் நாட்டில் தபால் முறை வளர்ச்சியுற்றிருப்பதற்கு உதார ணங்கள் கொடு.

பயிற்சி

(1) பின்வரும் சொற்களை வாக்கியங்களில் உபயோகி:—
நிலையங்கள், ஊழியர்கள், இன்றியமையாதது, அயலூர்.

(2) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுது:—

அவனுக்கு	+	கொடுத்தான்	=	அவனுக்குக் கொடுத்தான்
எனக்கு	+	தருவான்	=	
அவரை	+	கண்டேன்	=	
யாரை	+	சீறினன்	=	

(3) கீழ்க்காணும் வினைமுற்றுக்களின் காலத்தைக்கூறு:—

1. இராமன் வருவான்.
2. மாணவர்கள் விளையாடுகிறார்கள்.
3. ஆசிரியர் நேற்று நன்றாகக் கற்பித்தார்.

17. நிலவு

சொக்க வெள்ளித் தட்டு—மிகத்
    தூய வெண்ணெய்ப் பிட்டு
தெற்கத்தியார் சுட்டு—நல்ல
    தேங்காய்ப் பாலும் விட்டு
வைக்கச் சொன்ன தோசை—அது
    வயிர வட்ட மேசை
பக்க மீன்கள் பலவே—ஒரு
    பட்டத் தரசு நிலவே.

—பாரதிதாசன்

சொக்க   தூய   பிட்டு   வயிர

அருஞ்சொற்பொருள்

சொக்க வெள்ளி - சுத்தமான வெள்ளி. தூய - சுத்தமான. மீன்கள் - நட்சத்திரங்கள். பட்டத்தரசு - முடிமன்னன். நிலவை, வெள்ளித்தட்டு, வெண்ணெய்ப்பிட்டு, தோசை, மேசை, பட்டத்தரசு என்று பலவிதமாகக் கவிஞர் வர்ணிக்கிறார்.

பயிற்சி

இச்செய்யுளின் கருத்தை விளக்கிச் சில வரிகள் எழுது.

18. அரசனும் சிலந்தியும்

முன்னொரு காலத்தில் புரூஸ் என்ற மன்னன் ஸ்காட்லாந்து நாட்டிற்கு அரசனுன். அவன் சிறந்த போர்வீரன்; மக்களின் அன்பைப் பெற்றவன். எனினும் அவனுக்குச் சில பகைவர்கள் இருந்தார்கள். அவர்களின் தலைவன் ஸ்காட்லாந்தின் அரசுரிமை தனக்கே உரியது என்று கூறிக்கொண்டு புரூஸை எதிர்த்தான். அண்டை நாடான இங்கிலாந்தின் அரசன், புரூஸின் எதிரிக்குத் துணை புரிந்தான்; ஆகவே எதிரியின் கை ஓங்கியது. புரூஸ் தோல்வியுற்றுக் காட்டிற்கு ஓடிவிட்டான்.

ஆயினும் புரூஸ் மன உறுதியை இழக்கவில்லை. தன்னிடம் உண்மையோடிருந்த சில தலைவர்களின் உதவியால், காட்டிலிருந்துகொண்டே மறுபடியும் படை திரட்டினுன். எதிரியுடன் போர் தொடுத்தான். புரூஸ் மறுபடியும் தோல்வியுற்றுப் பின்வாங்க நேர்ந்தது.

இவ்வாறு புரூஸும் அவனுக்குத் துணைசெய்த தலைவர்களும் ஸ்காட்லாந்து நாட்டை மீட்க ஆறு தடவை பெருமுயற்சி செய்து, வெற்றிபெருது பின் வாங்கினர். புரூஸ் உடலும் மனமும் சோர்ந்து, சில நம்பிக்கையுள்ள ஊழியர்களுடன் காட்டுக்குச் சென்று, புதர்களிலும் குகைகளிலும் பதுங்கி வாழ்ந்தான்.

ஒரு நாள் புரூஸ் ஒரு குகையில் தனிமையாக உட்கார்ந்து, தன் நிலையைக் குறித்துக் கவலையுடன் எண்ணிக்கொண்டிருந்தான். அப்பொழுது, அவன் எதிரே ஒரு மெல்லிய நூலில் தொங்கிய ஒரு சிலந்தியின் மீது அவனது பார்வை திரும்பியது. சிலந்தி, அந்த நூலின் வழியாக ஏறி, மேலே அமைக்கப்பட்டிருந்த அதன் வலைக்கூட்டினை அடைய முயன்றது. சிலந்தி இருந்த இடத்திலிருந்து சுமார் எட்டடி உயரத்தில் அதன் கூடு இருந்தது. நாலைந்து அடி ஏறிய சிலந்தி வழுக்கிக் கீழே இறங்கிவிட்டது. இரண்டாம் தடவை முயன்ற அப்பூச்சி, இப்பொழுது மேலுஞ் சிறிது உயரத்திற்கு ஏறியதெனினும், மறுபடியும் வழுக்கி,

முதலிலிருந்த இடத்திற்கே வந்துவிட்டது. இவ்வாறு ஆறு தடவைகள் அப்பூச்சி தன் கூட்டை அடைய முயன்றது. தனது நிலையைப் போன்ற நிலையிலுள்ள அப்பூச்சியினிடம் புரூஸுக்கு இரக்கம் தோன்றியது.

சிலந்தி ஏழாம் தடவை ஏற முயற்சி செய்தது. இப்பொழுது மிக்க எச்சரிக்கையுடன் ஏறி, கூட்டுக்கு அருகே சென்றுவிட்டது. புரூஸ், வைத்த கண் வாங்காது அதையே

பார்த்துக் கொண்டிருந்தான்; அது மறுபடியும் வழுக்கி விழுந்துவிடும் என்றே அவன் நம்பினான். ஆனால் சிலந்தி, தனது வலைக்கூடு சுமார் அரை அடித் தொலைவிலிருந்த பொழுது திடீரெனப் பாய்ந்து ஏறிக் கூட்டை அடைந்துவிட்டது. மகிழ்ச்சி மிகுதியால் புரூஸ் கைகொட்டி, "பகுத்தறிவு இல்லாத உனக்கு உள்ள ஊக்கம்கூட எனக்கு இல்லையே! எத்தனை தடவை தோல்வியுற்றாலும், நம்பிக்கை இழக்காமல் திரும்பத் திரும்ப முயற்சி செய்ய வேண்டுமென்பதை உன்னிடமிருந்து இன்று கற்றுக்கொண்டேன்," என்று கூறிக் கொண்டான்.

உணவு தேடச்சென்றிருந்த அவனுடைய ஊழியர்கள் குகைக்குத் திரும்பி வந்தார்கள். புரூஸ், சிலந்தியின்

ஊக்கம் குன்றாத முயற்சிகளையும், இறுதியாக அது வெற்றி யடைந்ததையும் அவர்களுக்குக் கூறி, மறுபடியும் படை திரட்டுமாறு அவர்களைப் பணித்தான். அவ்வாறே சில மாதகாலம் அவனுடைய ஊழியர்கள் படை திரட்டினார்கள்.

எதிரிகள் எதிர்பாராதிருந்த தருணத்தில் புரூஸ் தன் படையுடன் வெளிப்பட்டுப் பல கோட்டைகளைத் தனதாக்கிக் கொண்டான். கடைசியாக எதிரிகளின் தலைமையான படை தளத்தையும் தாக்கினான். இம்முறை புரூஸ் வெற்றி பெற்றான். எதிரிப் படைகளில் பெரும்பகுதி அழிக்கப்பட்டது; எஞ்சியிருந்த சிலர் நிலைகுலைந்து தப்பி ஓடிவிட்டனர். புரூஸ் தனக்குரிய அரசுரிமையை மீண்டும் பெற்று, குடிமக்கள் கொண்டாடுமாறு ஆட்சி நடத்தினான்.

மீட்க	மனஉறுதி	அண்டை	படைதளம்
புதர்	பகுத்தறிவு	திரட்டினான்	பகைவர்
தனதாக்கு	பணித்தான்	தொலைவு	பதுங்கி
தாக்கினான்	கொண்டாடு	அரசுரிமை	கைஓங்கியது
பின்வாங்க	எதிரி	எச்சரிக்கை	மெல்லிய
இறுதி	கவலை	எதிர்பாராத	போர்தொடு
எஞ்சி	துணைபுரி	வழுக்கி	நிலைகுலைந்து

அருஞ்சொற்பொருள்

அண்டை - பக்கம். படைதளம்—சேனை தங்குமிடம். கை ஓங்கியது—வலிமை அதிகமாயிற்று. பணித்தான் —உத்தரவிட்டான். வைத்தகண் வாங்காது – கண் இமையாமல். குன்றா - குறையாத. பகுத்தறிவு – இது நல்லது இது கெட்டது என்று வேறுபடுத்தி அறியும் அறிவு.

வினாக்கள்

1. புரூஸ் தன் நாட்டை விட்டு ஓட நேர்ந்தது ஏன் ?
2. சிலந்தி தன் கூட்டினை அடைவதற்குச் செய்த முயற்சிகளைக் கூறுக.
3. சிலந்தியிடமிருந்து புரூஸ் கற்றுக்கொண்டது என்ன ?
4. புரூஸ் எவ்வாறு தன் அரசுரிமையை மீண்டும் பெற்றான் ?

பயிற்சி

(1) பொருள் கூறு :—

அண்டை; இறுதியாக; கைஓங்கியது; பணித்தான்; குன்றா; வைத்தகண் வாங்காது.

(2) உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி :—

கைஓங்கியது; மன உறுதி; பகுத்தறிவு; வைத்தகண் வாங்காது; கைகொட்டு; நம்பிக்கை.

(3) சொற்களைச் சேர்த்து எழுது :—

அரசு + உரிமை = அரசுரிமை
பரிசு + அடைந்தான் =
விறகு + இல்லை =
நாடு + ஆட்சி =
வீடு + உண்டு =

(4) ஒரு வாக்கியத்தில் எந்தப் பொருளைப் பற்றிக் கூறுகிறோமோ, அதைக் குறிக்கும் பெயர்ச்சொல் எழுவாய் என்றும், எழுவாயின் முடிந்த தொழிலைக் குறிக்கும் சொல் பயனிலை என்றும், பயனிலையின் தொழிலை அடையும் பொருளைக் குறிக்கும் சொல் செயப்படுபொருள் என்றும் நீங்கள் படித்திருக்கிறீர்கள்.

எல்லா வாக்கியங்களிலும் எழுவாயும் பயனிலையும் இருக்கும். செயப்படுபொருள் சில வாக்கியங்களில் இராது.

(5) பின் வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்துக் கூறுக :—

1. புருஸ் சோர்வடைந்தான்.
2. எதிரிகள் புருஸைத் துரத்தினார்கள்.

19. கொலம்பஸ்

உலகத்தில் அமெரிக்கா என்ற ஒரு கண்டம் இருப்பதைப் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். உலகப் படத்தில் வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காக் கண்டம் என்ற பெரிய நிலப்பகுதி இருப்பதை உலக மாந்தர் அறியவில்லை. முதன் முதல் அமெரிக்காவுக்குச் சென்று அதைக் கண்டுபிடித்தவர் கிறிஸ்தபர் கொலம்பஸ் என்ற இத்தாலிய மாலுமி ஆவர்.

பண்டைக்கால மக்கள் உலகம் தட்டையானது என்று எண்ணியிருந்தனர். ஆனால் கொலம்பஸ் உலகம் உருண்டை வடிவமானது என நம்பினார். ஐரோப்பாவிலிருந்து கிழக்குத்

திசையில் இந்தியா இருக்கிறது; பண்டைய ஐரோப்பிய வணிகர்கள் கிழக்கு நோக்கிப் பயணம் செய்து இந்தியாவை அடைந்தனர். மேற்குத் திசையிலே பயணம் செய்து இந்தியாவை அடையலாம் என்று கொலம்பஸ் நினைத்தார்.

கொலம்பஸ் ஒரு சிறந்த மாலுமி. அவர் தமது திட்டத்தை நிறைவேற்ற ஸ்பெயின் நாட்டு அரசியின் உதவி பெற்றார். மூன்று கப்பல்களையும் தேவையான உணவுப் பண்டங்களையும் வேறு சாதனங்களையும் சேகரித்துக் கொண்டார். தமக்கு உதவியாகச் சில மாலுமிகளையும் அமர்த்திக் கொண்டார். ஸ்பெயின் நாட்டிலிருந்து அட்லான்டிக் மாகடலில் மேற்கு நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார்.

அக்காலத்துக் கப்பல்கள் எல்லாம் பாய்மரக் கப்பல்களே; சரியான திசையில் காற்று வீசினால்தான் அவற்றைச் செலுத்த முடியும். பெரும் புயல் வீசினால் கப்பல்கள் தப்புவது அரிது. அட்லான்டிக் பெருங்கடலின் அகலமென்ன, அதன் எதிர்க்கரையை எத்தனை நாட்பயணத்திற்குப்பின் அடையலாம் என்ற விவரங்கள் கொலம்பஸுக்குத் தெரியாது. எனினும் அஞ்சா நெஞ்சத்துடன் அவர் அப்பயணத்தில் ஈடுபட்டார்.

கொலம்பஸின் கப்பல்கள் சென்றுகொண்டே இருந்தன; பல வாரங்கள் சென்றன. எனினும், அருகில் நிலப்பகுதி இருப்பதற்கான அறிகுறிகள் ஏதும் காணப்படவில்லை. கொலம்பஸின் ஆட்கள் அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்

யத் தலைப்பட்டனர்; தம் நாட்டுக்குத் திரும்பிவிட வேண்டு மென்று அவர்கள் கூறினர்.

கொலம்பஸ் அவர்களை நோக்கி, "இன்னும் மூன்று நாட்களுக்குள் நிலம் காணப்படாவிடில், நாம் ஸ்பெயினுக்குத் திரும்பி விடுவோம்," என்று கூறி அவர்களை அமைதி யுறச் செய்தார். மூன்றும்நாள் சில நிலப் பறவைகள் கப்பலைச் சுற்றி வட்டமிட்டன; சில நிலத் தாவரங்கள் கடலில் மிதந்து வந்தன. அருகே ஒரு நிலப்பகுதி இருப்பதற்கு அவை அறிகுறிகளாயின. கொலம்பஸும் அவருடைய ஆட்களும் அவற்றைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டனர். மேலும் சில நாட்கள் கப்பலைச் செலுத்தி, அவர்கள் ஒரு தீவின் கரையிலிறங்கினர். அது அமெரிக்காக் கண்டத்தை அடுத்திருந்த ஒரு தீவாகும்.

கொலம்பஸ் சில நாட்கள் அங்கிருந்தபின் மறுபடியும் ஸ்பெயின் நாட்டுக்குத் திரும்பி, தாம் கண்டுபிடித்த நாட்டைப் பற்றி அரசிக்கு எடுத்துரைத்தார். கொலம்பஸைப் பின்பற்றிப் பிற ஐரோப்பிய நாட்டினரும் அமெரிக்காவுக்குச் சென்று வந்தார்கள்; பலர் அங்கேயே குடியேறத் தொடங்கினார்கள். ஐரோப்பியரின் குடியேற்றத்தினால் அமெரிக்கா இன்று செல்வம் கொழிக்கும் பல நாடுகளாக விளங்குகிறது.

குடியேற்றம்	கரையிறங்கு	பின்பற்றி	இத்தாலியர்
மாந்தர்	மாலுமி	கிளர்ச்சி	வட்டமிட்டன
நிலம்	பாய்மரக்கப்பல்	அறிகுறி	அடுத்திருந்த
திட்டம்	அமைதியுற	புயல்	அஞ்சாநெஞ்சம்
தப்புவது	கொழிக்கும்	சேகரி	திசையிலேயே
அமெரிக்கா	நிறைவேற்ற	மாகடல்	தலைப்பட்டனர்
செலுத்த	காணப்படாவிடில்	சாதனம்	அமர்த்திக்கொள்

வினாக்கள்

1. உலகத்தின் வடிவம் என்ன என்று கொலம்பஸ் நம்பினார்?
2. கொலம்பஸ் எத்திசையில் சென்று இந்தியாவுக்கு வழி காண நினைத்தார்?
3. கொலம்பஸ் காலத்துக் கப்பல் பயணம் என்ன நிலையிலிருந்தது?

T3
031,54
N61
139618

4. கொலம்பஸின் ஆட்கள் ஏன் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர்?

5. அருகே நிலம் இருப்பதற்கு என்ன அறிகுறிகள் காணப்பட்டன ?

6. கொலம்பஸின் சிறப்பு இயல்புகளைப் பற்றி ஐந்தாறு வாக்கியங்கள் எழுது.

பயிற்சி

(1) பின்வரும் வாக்கியங்களில் எழுவாய்கள் மறைந்திருப்பதைக் கவனி.

1. இங்கே நில். (நீ எழுவாய்).
2. இப்பொழுதுதான் புசித்தோம். (நாம் எழுவாய்).

முதல் வாக்கியத்தில் நீ எழுவாய். இரண்டாம் வாக்கியத்தில் நாம் எழுவாய். இவை வெளிப்படையாக இல்லாவிட்டாலும், பயனிலைகளிலிருந்து இந்த எழுவாய்களை எளிதில் அறிகிறோம். இம்மாதிரி வரும் எழுவாய்க்குத் தோன்றா எழுவாய் என்பது பெயர்.

(2) பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய்களைக் கூறு :—

1. இதை நாளைக்கே செய்வார்கள்.
2. இசையைக் கேட்டால் மகிழ்வீர்கள்.
3. எல்லோருக்கும் கொடுப்பேன்.

(3) தோன்றா எழுவாய் அமையும்படி மூன்று வாக்கியங்கள் எழுது.

20. தெனாலிராமன் தன் மைத்துனனைக் காத்தல்

விசயநகரத்து அரண்மனைத் தோட்டத்தில் ஏராளமான பழமரங்கள் இருந்தன. அதில் மேல்நாட்டிலிருந்து கொண்டுவந்து வளர்க்கப்பட்ட உயர்ந்தவகைப் பழமரங்கள் கனிகளோடு விளங்கின. இந்தப் பழங்கள் அரசருக்குமட்டும் பயன்படவேண்டுமென்று உத்தரவு போட்டிருந்தார்கள். மீறிப் பழங்களைத் திருடுவோருக்கு மரண தண்டனை விதித்தார்கள்.

தெனாலிராமனின் மைத்துனன் ஒருவன் தன் சிற்றூரிலிருந்து தெனாலிராமனின் வீட்டுக்கு விருந்தினனாக வந்திருந்தான். அரண்மனையிலுள்ள பழங்களைப்பற்றி அவன்

கேள்விப்பட்டான். அப்பழங்களில் சிலவற்றைத் திருடியா வது பறித்துத் தின்ன ஆவல் கொண்டான்.

ஒருநாள் அவன், யாரும் அறியாமல் அரசரின் தோட் டத்தில் புகுந்து பழங்களைப் பறித்துத் தின்ருன். "ஆகா ! என்ன சுவை ! என்ன சுவை !" என்று ஆவலுடன் அவன் தின்னும்போது, காவலாளிகள் கண்டுகொண்டனர். அவ னைப் பிடித்துக் கொண்டு போய் அரசர் முன்னிலையில் நிறுத் தினர்கள்.

தனது தம்பி குற்றவாளியாக அரசர் முன் நிற்பதை அறிந்த தெனலிராமனின் மனைவி, "நீங்கள் எப்படியாவது என் தம்பியைத் தண்டனையில்லாமல் தப்புவிக்க வேண்டும்," என்று தன் கணவனைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

அரசவையில் இராயர் தெனலிராமனின் மைத்து னனை விசாரணை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது தெனலிராமன் அரசவைக்குள் நுழைந்தான். தெனலிராமன் வருவது ஏதற்காக என்பது இராயருக்குத் தெரிந்துவிட்டது. அவர், "தெனலிராமா! உனது மைத்துனனைத் தண்டனையி லிருந்து காப்பாற்ற நீ என்ன தந்திரம் செய்தாலும் அது

பயன் பெருது. நீ கேட்பதற்கு எதிராகவே எனது தீர்ப்பை அளிப்பேன்,'' என்ருர் சினத்துடன்.

உடனே தெனுலிராமன், "அரச பெருமானே! நீங்கள் கொடுத்த வாக்கிலிருந்து சற்றும் மாறமாட்டீர்கள் என்று நம்புகிறேன். தவறு இழைத்த என் மைத்துனனுக்கு மரண தண்டனையே கொடுக்க வேண்டும். தங்களிடம் இதைத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளவே ஓடிவந்தேன்,'' என்று சொன்னுன்.

இதைக் கேட்டதும், இராயரும் சபையோரும் வியப் படைந்தார்கள்; இராயர் தெனுலிராமன் அறிவுக் கூர் மையை நினைத்து மகிழ்ந்தார். இராயருடைய பேச்சைத் தனக்கு ஏற்றபடி தெனுலிராமன் பயன்படுத்திக் கொண்டான்.

இராயர், "இராமா! நான் அளித்த வாக்குப்படியே உன் மைத்துனனை மரண தண்டனையிலிருந்து விடுவிக்கி றேன். ஆனுல் இந்த நகருக்கு அவன் மறுபடியும் வரவே கூடாது!'' என்று தீர்ப்பளித்தார்.

மைத்துனன், 'தப்பினேன், பிழைத்தேன்,' என்று தம் ஊரை நோக்கி ஓட்டமெடுத்தான்.

ஏற்றபடி	பயன்பெருது	தாழ்மையாக	காவலாளி
பெருமான்	குற்றவாளி	விருந்தினன்	உத்தரவு
திருடியாவது	உயர்ந்தவகை	முன்னிலையில்	அரசவை
மைத்துனன்	ஏராளமான	விதித்தார்	ஓட்டமெடு
தந்திரம்	தப்புவிக்க	வாக்கு	விடுவி
கனிகள்	நுழைந்தான்	அரண்மனை	இழைத்த
மாறமாட்டீர்கள்	கெஞ்சிக்கேள்	அறிவுக்கூர்மை	விசாரணை

வினுக்கள்

1. இராயருடைய தோட்டத்தில் அரசருக்கு மட்டும் பயன்பட வேண்டுமென்று எந்தப் பழங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன ?

2. தெனுலிராமனுடைய மைத்துனன் எப்பொழுது குற்றவாளி யானுன் ?

3. தெனுலிராமன் அரசவைக்குள் நுழைந்தபொழுது இராயர் யாது சொன்னுர் ?

4. தெனுலிராமன் இராயர் கூறியதைத் தனக்கு நன்மையாக எப் படி மாற்றிக் கொண்டான் ?

பயிற்சி

பெயர்ச்சொற்கள் வாக்கியங்களில் வரும்பொழுது அவற்றின் உருவங்கள் சற்று வேறுபட்டு விடுவதைப் பார்க்கிறோம். பின் வரும் வாக்கியங்களைப் படியுங்கள் :—

1. மரம் எரிகிறது.
2. மரத்தை வெட்டினான்.
3. கந்தன் சோறு தின்றான்.
4. இது கந்தனது புத்தகம்.
5. இவ்வேலை கந்தனால் செய்யப்பட்டது.

மரம் என்ற பெயர்ச்சொல் முதல் வாக்கியத்தில் மரம் என்றும் இரண்டாம் வாக்கியத்தில் மரத்தை என்றும் வந்துள்ளது. கந்தன் என்ற பெயர்ச்சொல், மூன்றாம் வாக்கியத்தில் கந்தன் என்றும் நான்காம் வாக்கியத்தில் கந்தனது என்றும் ஐந்தாம் வாக்கியத் தில் கந்தனால் என்றும் வந்துள்ளது.

இவ்வாறு ஒரு பெயர்ச்சொல் தன் உருவம் சற்று வேறு பட்டு வருவதற்கு வேற்றுமை என்று பெயர்.

21. தமிழ் இலக்கியம்

வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவோமே—என்றும்
உத்தம ராகி ஒழுகுவோமே. 1

பாவின் சுவைக்கட லுண்டெழுந்து—கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவின் இனிக்கப் பருகுவோமே—நூலின்
நன்னய முற்றுந் தெளிகுவோமே. 2

தேனிலே ஊறிய செந்தமிழின்—சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும்—நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே. 3

கற்றவர் மெச்சும் கலித்தொகையா—மின்பக்
கற்பனை சேருங் களஞ்சியத்தை
முற்ற அளந்து தெரிவோமே—காதல்
மூழ்கும் துறைகண்டு வாழ்வோமே. 4

பண்டை இயற்கை வளங்களெல்லாம்—பத்துப்
பாட்டின் வளத்தினிற் கண்டறிந்து
மண்டல மெங்கும் கமழும்—அருந்தமிழ்
வாசம் நுகர்ந்து மகிழ்வோமே.

—தேசிகவிநாயகம் பிள்ளை

மறை	தீம்பால்	கமழும்	உத்தமர்
ஊன்	பருகுவோம்	கற்பனை	நன்னயம்
நிதம்	நுகர்ந்து	மண்டலம்	களஞ்சியம்
வாசம்	வளங்கள்	பொழிந்த	தெளிகுவோம்

அருஞ்சொற்பொருள்

மறை–வேதம். வள்ளுவர் தந்த மறை–திருக்குறள். உள்ளம்–மனம். ஊன்–சதை, உடம்பு. நிதம்–தினந்தோறும். மண்டலம்–பூமி. வாசம்–வாசனை.

வினாக்கள்

1. திருக்குறள் தமிழ் மாதினுடைய எதைப் போன்றது?
2. கம்பன் பூமியில் பொழிந்த இனிய பாற்கடல் எது?
3. இந்தச் செய்யுளில் கவி சிறப்பித்துப் பேசும் நூல்கள் யாவை?

22. தீக்குச்சி சொல்லும் கதை

நான் யார் தெரியுமா? நான் இல்லாமல் இக்காலத்தில் வாழ்க்கையே நடத்த முடியாது. அடுப்புப் பற்றவைக்கவும், எண்ணெய் விளக்குகளை ஏற்றவும் என்னைத்தான் தேடுகிறீர்கள். நான் தான் தீக்குச்சி. முற்காலத்தில் நான் இல்லாமல் மக்கள் எத்தனை அவதியுற்றார்கள் தெரியுமா? சிக்கிமுக்கிக் கற்களையும் தீக்கடைகோல்களையும் கொண்டு நெருப்பை உண்டாக்குவதற்குள் அவர்களுக்குப் போதும் போதுமென்றாகிவிடும். இப்பொழுது காலம் மாறிவிட்டது. மலிவாக நீங்கள் எங்களை வாங்குகிறீர்கள்; அதன் உள்ளிருந்து என்னை எடுத்துக் கிழிக்கிறீர்கள். உடனே விளக்கை ஏற்றிவிடுகிறீர்கள்; அடுப்பைப் பற்றவைக்கிறீர்கள்.

தமிழ் நாட்டில் சிவகாசி, சாத்தூர், திருத்தங்கல் முதலிய ஊர்களில் கோடிக்கணக்காக எங்களைத் தயார்

செய்கிறார்கள். பெரும்பகுதி வேலை குடிசைத் தொழிலாகவே நடைபெறுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைக்காடுகளில் பாலை என்ற ஒரு மெதுவான மரம் வளர்கிறது. இந்த மரங்களை எந்திரங்களில் கொடுத்து ஒரே அளவான குச்சிகளாகவும் மெல்லிய தகடுகளாகவும் செய்யப்பட்டு இவ்வுருவத்தைப் பெறுகிறோம். எங்களைச் சில தனிப்பட்ட சட்டங்களில்



1. குச்சிகளை அடுக்கும் சட்டம், 2. உருகின மெழுகில் குச்சி முனைகளைத் தோய்த்தல், 3. குச்சி முனைகளை மருந்துக் கலவையில் தோய்த்தல், 4. தீப்பெட்டி.

செருகி அடுக்குகிறார்கள். ஒவ்வொரு சட்டத்திலும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட எங்களை அடுக்கலாம். எங்களை அடுக்கும் தொழிலை மக்கள் தம் வீடுகளில் ஓய்வு நேரத்தில் செய்கிறார்கள். இதனால் அவர்களுக்கு ஊதியம் கிடைக்கிறது.

தொழிற்சாலையில் சில மருந்துகளின் கலவை தயாரிக்கப்படுகிறது. இது ஒரு குழம்புபோல் செய்யப்பட்டிருக்கும். சட்டத்தில் அடுக்கப்பட்ட எங்களின் முனைகளை முதலில் உருகின மெழுகில் தோய்ப்பார்கள்; பிறகு மருந்துக் குழம்பில் தோய்ப்பார்கள். ஒரு சிறிது மருந்து எங்களின் நுனிகளில்

ஒட்டிக்கொண்டிருக்கும். நாங்கள் அப்படியே உலருவோம். இப்பொழுது என்னுடைய முழு உருவம் அமைந்து விட்டது.

பாலை மரத்திலிருந்து சீவிய மெல்லிய தகடுகளைக் கொண்டு சிறு சிறு பெட்டிகள் தயாரிக்கப்படும். பெட்டிகளின் மேற் பக்கத்தில் தொழிற்சாலைப் பெயர் அல்லது வணிகக் குறி அச்சடித்த காகிதம் ஒட்டப்படும். இரு பக்கங்களிலும் மற்றொரு மருந்துக் குழம்பு பூசப்பட்டு உலர்த்தப்படும். என்னைப் போன்ற உலர்ந்த தீக்குச்சிகளை நாற்பதாகவோ அறுபதாகவோ எண்ணி முன் தயாரித்த பெட்டிகளில் போட்டு மூடுவார்கள். இதன் பின் தொழிற்சாலை முதலாளி அரசினருக்கு வரி கொடுத்து, முத்திரையுள்ள மெல்லிய காகித நாடாக்களை வாங்கி, நாங்களிருக்கும் பெட்டிகளின் மேல் ஒட்ட ஏற்பாடு செய்வார். இந்தத் தொழிலிலிருந்து அரசினருக்குக் கோடிக்கணக்கான ரூபாய்கள் வருமானம் கிடைக்கிற தென்றால், எத்தனை கோடி தீப்பெட்டிகளாக நம் நாட்டில் நாங்கள் தயாரிக்கப் படுகின்றோம் என்பதை நீங்கள் நினைத்துப் பாருங்கள்.

ஆனால் தீக்குச்சியாகிய என்னைக் கண்டால் உங்களுக்கு அற்பமாகத் தோன்றுகிறது. சட்டென்று என்னைக் கிழித்து எரிய விட்டு வீணாக்கி வேடிக்கை பார்க்கிறீர்கள். எத்தனை ஆட்களுடைய ஒத்துழைப்பினால் நான் உருவாகிறேன் என்பதை எண்ணிப் பாருங்கள்! என்னை வீணாக்காது பயன்படுத்துங்கள்.

அற்பம்	வேடிக்கை	ஓய்வுநேரம்
எத்துணை	செருகி	பாலைமரம்
பற்றவை	உருவாகு	ஊதியம்
வீணாக்கு	கலவை	தயாரிக்க
வருமானம்	அவதியுறு	ஒத்துழைப்பு
சீவிய	மெதுவான	நடைபெறுகிறது
முத்திரை	சிக்கிமுக்கிக்கல்	மெழுகு
தீக்கடைகோல்	மெல்லிய	தொழிற்சாலை

வினாக்கள்

1. பண்டைக்கால மக்கள் நெருப்பை எப்படி உண்டாக்கினார்கள்?
2. தமிழ் நாட்டில் தீப்பெட்டிகள் எந்த ஊர்களில் குடிசைத் தொழிலாகச் செய்யப்படுகின்றன?
3. தீக்குச்சிகள் எப்படித் தயார் செய்யப்படுகின்றன?
4. தீக்குச்சிகளுக்கான பெட்டிகள் எப்படி அமைக்கப்படுகின்றன?
5. தீப்பெட்டித் தொழிற்சாலையினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மை என்ன?

பயிற்சி

(1) எதிர்மொழி கூறுக:
அற்பம், மலிவாக, வருமானம்.

(2) சொற்களைப் பிரித்து எழுது:
முற்காலம், தீப்பெட்டி, மலைக்காடு.

(3) ஒரு வாக்கியத்தில் எழுவாய்க்குப் பொருத்தமாக வினைமுற்று அமைய வேண்டும். அதாவது எழுவாயின் திணை, பால், இடங்களுக்கு ஏற்றதாக வினைமுற்றின் திணை, பால், இடங்களும் இருக்கவேண்டும்.

மாதிரியில் காட்டியுள்ளதுபோல், எழுவாய்க்கு ஏற்ற வினைமுற்றுக்களை கட்டங்களில் எழுது:—

எழுவாய்	வினைமுற்று		
	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
நான்	உண்டேன்	உண்கிறேன்	உண்பேன்
நாம்			
நீ			
நீர்			
நீங்கள்			
அவன்			
அவள்			
அவர்கள்			
அது			
அவை			

23. வீண் பெருமைகொண்ட நரி

ஒரு காட்டில் பல நரிகள் கூட்டமாக வாழ்ந்தன. அவற்றில் இளநரியொன்று மிகத் தற்பெருமை கொண்டிருந்தது. அது தம் இனத்தவருடன் வாழ விரும்பவில்லை. வனத்திலுள்ள எல்லா விலங்குகளையும் அடக்கி ஆளவேண்டுமென அது எண்ணியது.



ஒரு நாள் அந்த இளநரி தன் குடும்பத்தார் வாழ்ந்த குகையை விட்டுப் புறப்பட்டது. பல இடங்களிலும் சுற்றி அலைந்தது. ஓர் இரவில் ஓர் ஊரின் எல்லைப்புறத்தை அடைந்தது. அங்கிருந்த ஒரு வீட்டின் வெளிச் சுற்றுச் சுவரைத் தாண்டி உள்ளே குதித்தது. அது சாயத்தொழிலாளி ஒருவனுடைய வீடு. அங்கே ஒரு தொட்டியில் நீலச் சாயம் கரைத்து வைக்கப்பட்டிருந்தது. நரி அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே வரும்பொழுது, சாயத் தொட்டியினுள் தவறி விழுந்துவிட்டது.

தட்டுத் தடுமாறித் தொட்டியை விட்டு வெளிவந்த நரி, தன் உடலெல்லாம் நீலமாயிருப்பதைக்கண்டது. அது தனக்குள், "நான் இப்படி உருமாறி இருப்பதும் நல்லது தான். என்னைக் காணும் இந்த வனவிலங்குகள் எல்லாம்

அஞ்சும்; என்னைத் தங்கள் அரசனாகக் கொள்ளும்,'' என்று எண்ணி மகிழ்ந்தது. பிறகு காட்டிற்குச் சென்றது.

காட்டிலிருந்த விலங்குகளெல்லாம் நீல நரியைக் கண்டு அஞ்சின. அது ஏதோ ஒரு புதிய விலங்கு என்று கருதின. சிங்கம், யானை, புலி போன்ற விலங்குகளும் அதைத் தம் அரசனாக ஏற்றுக்கொண்டன. நீல நரி, ஒரு பெரிய யானையின்மீது ஏறிக்கொண்டு பல இடங்களுக்கும் செல்வதை வழக்கமாகக் கொண்டது. நூற்றுக்கணக்கான விலங்குகள் எப்பொழுதும் அதைப் பின் தொடர்ந்து சென்று அதன் ஏவலைச் செய்து வந்தன. பல நரிகளும் அந்தக் கூட்டத்தில் இருந்தன. அவைகளுக்கு மட்டும் நீல நரியைப் பற்றிய ஐயம் இருந்துவந்தது.

ஒரு நாளிரவு முழுநிலாக் காய்ந்தபொழுது கூட்டத்திலிருந்த நரிகளெல்லாம் ஊளையிடத் தொடங்கின. பல நரிகள் ஊளையிடும்பொழுது ஒரு நரியால் சும்மா இருக்க இயலாது; அதுவும் சேர்ந்து ஊளையிடவே விரும்பும். ஒரு நரி அவ்வாறு சேர்ந்து ஊளையிடாவிட்டால், அதன் உரோமம் உதிர்ந்துவிடுமென்று நரிகளுக்குள் ஒரு நம்பிக்கையுண்டு.

நரிக்கூட்டம் ஊளையிடத் தொடங்கியதும், நீல நரியினால் சும்மாயிருக்க இயலவில்லை; உடனே அதுவும் ஊளையிட்டது. இதைக் கேட்ட யானை, "என்மீது அமர்ந்திருக்கும் நீல அரசன், ஒரு நரிதானா!'' என்று எண்ணித் தனது துதிக்கையினால் அந் நரியைப் பிடித்துத் தரையில் அடித்துக் கொன்றது.

வீண்பெருமை கொள்வோர் வீழ்ச்சியுறுவர்.

உருமாறி	உதிர்ந்து	தற்பெருமை	தட்டுத்தடுமாறி
தவறி	இனத்தவர்	சுற்றுச்சுவர்	அங்குமிங்கும்
துதிக்கை	ஊளையிடு	வீழ்ச்சியுறு	வீண்பெருமை
ஏவல்	முழுநிலா	ஐயம்	சாயத்தொழிலாளி

வினாக்கள்

1. இள நரி எவ்வாறு ஏன் உருமாறியது ?
2. நீல நரியைக் கண்ட பிற விலங்குகள் ஏன் அஞ்சின ?

3. நீலநரி எவ்வாறு காட்டில் பல இடங்களுக்குச் சென்று வந்தது ?

4. நீல நரியின் உண்மை இயல்பு எப்பொழுது வெளிப்பட்டது ? அதன் முடிவு யாது ?

பயிற்சி

(1) பெயர்ச் சொற்கள் வாக்கியங்களில் வரும்பொழுது அவை உருவ வேற்றுமையடையக் கூடுமென்றும் பார்த்தோம். வேற்றுமைகள் எட்டு வகைப்படும். வேற்றுமைகளைக் காட்டுவதற்காகப் பெயர்ச் சொற்களுடன் சேர்க்கப்படும் எழுத்துக்கு (அல்லது சொல்லுக்கு) வேற்றுமை உருபு என்று பெயர்.

(2) முதல் வேற்றுமை : இதற்கு உருபு இல்லை. மாறுபாடில்லாத பெயர்ச் சொல்லே வாக்கியத்தில் வரும் பொழுது முதல் வேற்றுமை எனப்படும். இது வாக்கியத்தில் எழுவாயாக வரும். இதை எழுவாய் வேற்றுமை என்றும் சொல்லலாம்.

(உ - ம்) வேலன் வந்தான்.
அவன் யார் ?
அது பாம்பு.

(3) இரண்டாம் வேற்றுமை : இதன் உருபு ஐ. இந்த வேற்றுமையில் வரும் பெயர்ச் சொற்கள் வாக்கியத்தில் செயப்படு பொருளாக வரும்.

(உ - ம்) அவன் பாலைப் பருகினான்.
தச்சர் மரத்தை வெட்டுகிறார்.
நான் பாம்பை மிதித்தேன்.

(4) வீடு, நீ, நான், பணம்—இந்தச் சொற்களை முதல் வேற்றுமையிலும் இரண்டாம் வேற்றுமையிலும் அமைத்து வாக்கியங்கள் எழுது.

24. உலகப் போக்கு

உலகப் போக்கைப் பாருங்கள்
ஊரைக் காக்கச் சேருங்கள் ;
கலகப் பேய் புகுந்திடும்
கவலையே மிகுந்திடும். (உலக)

அடிமை வாழ்வு விட்டுநாம்
ஆண்மை வாழ்வு கிட்டினோம் ;
கடமையோடு எல்லையைக்
காக்க வேண்டும் அல்லவோ ? (உலக)

நாடு முற்றும் நம்மது
நன்மை தீமை நம்மது ;
வீடு பெண்டு மக்களை
வேறு காக்க திக்கு யார் ? (உலக)

படை யெடுக்கும் யாரையும்
பயமுறுத்து வோரையும்
நடு நடுங்கச் செய்குவோம்;
நாட்டை மீட்டு உய்குவோம். (உலக)

சாந்த வாழ்வை மிஞ்சிடோம்
சாவதற்கும் அஞ்சிடோம்;
மாந்தருக்குள் பீதியை
மாற்ற வேண்டும் நீதியால். (உலக)

— வெ. ராமலிங்கம் பிள்ளை

ஆண்மை	பீதி	உய்குவோம்	சாந்த
கிட்டினோம்	பெண்டு	மீட்டு	திக்கு
போக்கை	கலகப்பேய்	பயமுறுத்து	மிஞ்சிடோம்

அருஞ்சொற்பொருள்

உலகப்போக்கு – உலக மக்கள் செல்லும் பாதை. ஆண்மை – வீரம். கிட்டினோம் – அடைந்தோம். பெண்டு – பெண்கள். திக்கு – ஆதரவு, திசை. மீட்டு – விடுதலை செய்து. உய்குவோம் – வாழ்வோம். மிஞ்சிடோம் – மீறமாட்டோம். மாந்தர் – மக்கள். பீதி – பயம்.

வினாக்கள்

1. உலக நிலைமை எப்படி இருக்கிறதென்று கவிஞர் கூறுகிறார் ?
2. நமது முக்கியமான கடமை என்ன ?
3. நம்மைப் பயமுறுத்துவோரையும் நம்மீது படையெடுப்போரையும் நாம் என்ன செய்யவேண்டும் ?
4. உலக மக்களிடையே எழுந்துள்ள யுத்த பீதியை எவ்வாறு குறைக்க வேண்டும் ?
5. இப்பொழுதுள்ள உலக நிலைமையைப்பற்றியும் நமது கடமையைப் பற்றியும் ஐந்து வாக்கியங்களில் எழுது.

25. பச்சோந்தி

இரண்டு வழிப்போக்கர்கள் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டே ஒரு சாலையில் போய்க்கொண்டிருந்தார்கள். ஊர்க்கதைகள் எல்லாம் பேசிய பிறகு ஒருவன், "பச்சோந்தியைப் போல் வேடிக்கையான பிராணியை நான் பார்த்ததில்லை. பல்லியைப் போல் உடம்பு; மீனைப்போல் தலை;

பாம்பைப்போல் நாக்கு; அதன் வால்தான் எத்தனை நீளம்! அதன் நிறம்தான் எத்துணை அழகிய நீலம் தெரியுமா?" என்றான்.

"நிறுத்து, நிறுத்து! நீலமா? பச்சையல்லவா அது! இந்தக் கண்களால்தான் பார்த்தேன். ஒரு நாள் மாலை புல்வெளியில் படுத்துக் காற்றைக் குடித்துக்கொண்டிருந்தது," என்றான் மற்றவன்.

உடனே முதல் வழிப்போக்கன், "நானுந்தான் பார்த்திருக்கிறேன்! ஒரு நாள் அது நீலமான பாறைமீது படுத்திருந்தது. நெடுநேரம் பார்த்துக்கொண்டு நின்றேன். அது நீலந்தான்," என்று மறுத்துக் கூறினான். இரண்டாம்

வழிப்போக்கன், "அது பச்சைதானப்பா, பச்சைதான்," என்ருன். முதல் வழிப்போக்கன் சினத்துடன், "பச்சையா? எனக்குக் கண் அவிந்துவிட்டது என்று சொல்லுகிருயா?" என்று கேட்டான்.

இரண்டாம் வழிப்போக்கன், "பச்சையை நீலமாகக் காட்டுகின்ற கண் இருந்தாலும் அவிந்தாலும் ஒன்றுதான்," என்ருன் சிரித்துக்கொண்டே.

அவர்களுக்குள் பேச்சு முற்றி அடிதடியாக மாறிவிடும் நிலேக்கு வந்துவிட்டது. அப்பொழுது நல்ல வேளேயாக மூன்ரும் வழிப்போக்கன் ஒருவன் அங்கே வந்தான். இவர்களுடைய வழக்கைக் கேட்ட அவன், "பச்சோந்தியை நீங்கள் பார்த்ததே இல்லே. அது நல்ல கறுப்பு. நேற்று இரவு அதை நான் பிடித்து விளக்கு வெளிச்சத்தில் பார்த்தேன். மை



நிறமாயிருந்தது. அது இன்னும் என் பெட்டியில்தான் இருக்கிறது," என்ருன்.

இரண்டு வழிப்போக்கர்களும், "அதை எடு, பார்க்கலாம்," என்றனர்.

மூன்ரும் வழிப்போக்கன் தன்னிடமிருந்த ஒரு பெட்டியைத் திறந்தான். பச்சோந்தி வெளியே குதித்தது. மூவரும் திகைத்தனர். இது என்ன விந்தை! அது வெளுப்பாயிருந்தது. பச்சோந்தி அவர்களேப் பார்த்து, "ஏன் இப்படி விழிக்கிறீர்கள்! நீங்கள் மூவரும் உண்மைதான் சொன்னீர்கள். ஆனல் நீங்கள் சொன்னதே உண்மை என்றும் பிறர் கூறியதெல்லாம் பொய் என்றும் சொல்லியிருக்கக் கூடாது. உங்களேப் போலவே பிறரும் தம் கண்களேக் கொண்டே பார்க்கிருர்கள் என்பதை மறக்க வேண்டாம். நான் இருக்கும் இடத்திற்குத் தக்கவாறு என் நிறம் மாறும் என்பதுதான் உண்மை," என்று கூறிவிட்டு அருகிலிருந்த ஒரு மரத்தின்மீது ஏறிக்கொண்டது.

திகைத்தனர்	தக்கவாறு	மைநிறம்
அடிதடி	பச்சோந்தி	வெளிச்சம்
வழிப்போக்கன்	பேச்சுமுற்றி	விழிக்கிறீர்கள்
ஊர்க்கதை	மறுத்துக்கூறு	கண்ணவிந்து

வினுக்கள்

1. பச்சோந்தியைப்பற்றி முதல் வழிப்போக்கன் யாது கூறினுன்?
2. இரண்டாம் வழிப்போக்கன் அதை எவ்வாறு மறுத்தான் ?
3. மூன்ரும் வழிப்போக்கன் பச்சோந்தியின் நிறத்தைப் பற்றி என்ன சொன்னுன் ?
4. பெட்டியிலிருந்து குதித்த பச்சோந்தி என்ன நிறமாயிருந்தது?
5. பச்சோந்தி தன் நிறம் பற்றி என்ன கூறியது? அது வழிப் போக்கர்களுக்கு என்ன அறிவுரை கூறியது ?

பயிற்சி

(1) மூன்ரும் வேற்றுமை : இந்த வேற்றுமையின் உருபுகள், ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகிய நான்கு மாகும். சில சமயங்களில் உடன் என்ற சொல்லும் உருபாக வரும்.

(உ-ம்) இது பொன்னுல் செய்யப்பட்டது.
அவன் வாளால் வெட்டினுன்.
தந்தையொடு மகனும் வந்தான்.
சோற்ருேடு கறியும் தின்ருன்.
குருவுடன் மாணவனும் வருகிருன்.

(2) நான்காம் வேற்றுமை : இந்த வேற்றுமையின் உருபு கு.

(உ-ம்) மகனுக்கு அளித்தான்.
பாம்புக்குப் பகை கீரி.

(3) ஐந்தாம் வேற்றுமை : இந்த வேற்றுமையின் உருபுகள் இல், இன் என்ற இரண்டுமாகும். இருந்து, நின்று என்ற சொற்களும் இவ்வேற்றுமையின் உருபுகளாக வரும்.

(உ-ம்) காக்கையில் கரிது களம்பழம்.
சென்னேயின் நீங்கினுன்.
வடநாட்டிலிருந்து வந்தவர்கள்.
மதுரையினின்று புறப்பட்டார்கள்.

(4) நான், நீ, மரம், குமரன் என்ற சொற்களே மூன்ரும், நான் காம், ஐந்தாம் வேற்றுமைகளில் அமைத்து வாக்கியங்கள் எழுது.

26. பொங்கல் விழா

மார்கழி மாதம் முடிந்து தை மாதம் தொடங்கும் பொழுது, நம் தமிழ் நாட்டில் குளிர்காலம் பெரும்பாலும் கழிந்துவிடுகிறது. அதற்குள் குடியானவர்களின் உழைப்பும் முற்றுப்பெற்று வீடுகளில் புதுநெல் நிரம்பியிருக்கும். நெல் விளைவதற்குத் தேவையான மழையையும் வெப்பத்தையும் அளித்த தெய்வங்களான இந்திரனையும் சூரியனையும் வணங்கும் நாட்களே பொங்கல் விழா நாட்களாகும்.

பொங்கல் விழா என்பது தொன்றுதொட்டே நம் தமிழ் நாட்டில் கொண்டாடப் பெற்று வருகின்றது. பண்டைக் காலத்தில் இது இந்திர விழா என்ற பெயருடன் கொண்டாடப் பெற்றதாகத் தெரிகிறது.

பொங்கல் விழா வரப்போவதைக் கருதி மார்கழி மாதக் கடைசி நாட்களிலேயே வீட்டுச் சுவர்களையும் தரையையும் பழுது பார்த்து, காரை, மண் முதலியன பூசி வைப்பார்கள். வீடுகளுக்கும் வெள்ளையடிப்பார்கள். மார்கழி மாதம் கடைசி நாள் போகிப்பண்டிகை எனப்படும். போகி என்பது இந்திரனுடைய பெயர்களில் ஒன்று. ஆகையால் அன்றுதான் இந்திரவிழா நாள் ஆகும். அன்று வீட்டிலிருக்கும் பழைய பாய், கூடை, முறம், துடைப்பம் போன்ற பொருள்களை வீட்டுக்கு முன்னே வைத்துக் கொளுத்துவார்கள். அந்தத் தீயின் முன் சிறியோரும் பெரியோரும் அமர்ந்து பறை கொட்டி ஆடிப்பாடி மகிழ்வர். பழைய பானைகளை வெளியே எறிந்துவிடுவார்கள். இவைகளுக்குப் பதிலாக, புதுப்பானை, பாய், கூடை, முதலிய பொருள்களை வாங்கி வைத்துக் கொள்வார்கள்.

இவ்வாறு வீட்டையும், வீட்டிலுள்ள சில பொருள்களையும் புதுப்பித்துவிட்டு, எண்ணெய் தேய்த்துக் குளிப்பார்கள். பிறகு புதிய தின்பண்டங்கள் செய்து இந்திரனுக்குப் படைத்து வழிபடுவார்கள். அவற்றைத் தாமும் உறவினரும் உண்டு மகிழ்வார்கள்.

தை மாதம் முதல் நாள் பொங்கல் பண்டிகை ஆகும். அன்று வீட்டை நன்கு மெழுகித் தூய்மையாக்கி, செம் மண்ணினாலும் மாவினாலும் கோலங்கள் போடுவார்கள். வீட்டு வாயிலிலும் அழகிய பெரிய கோலங்கள் வரையப்படும். பூசணிப் பூக்களைப் பறித்துக் கோலங்களின் இடையிடையே வைத்து அழகு செய்வர். அன்றுதான் அந்த ஆண்டின் புது அரிசியை முதன் முதலாகச் சோறு சமைப்பார்கள். இதற்காக மூன்று மண் கட்டிகளின் மீது புதுப் பானையை வைத்து அதில் புது நெல்லைக் குத்திக் கிடைத்த அரிசியைப் போட்டுச் சோருக்குவர். மஞ்சள் கொத்தையும் கரும்புத்

துண்டையும் பானையின் கழுத்தில் கட்டுவர். உலையில் சிறிது பாலையும் ஊற்றுவர். சோறு பொங்கும் பொழுது வீட்டில் உள்ள யாவரும் 'பொங்கலோ பொங்கல்!' என்று கூவித் தம் மகிழ்ச்சியை வெளியிடுவர். பொங்கல் பானை பொங்கி, சோறு பதமானவுடன் அதை இறக்கி வைத்து, தாம் தொழும் தெய் வத்திற்கும் சூரியனுக்கும் படைப்பார்கள். பிறகு புது ஆடை கள் அணிந்துகொண்டு அந்தப் பொங்கலையும், வேறு பல உணவுகளையும் தம் உறவினருடன் உண்பார்கள்.

தை மாதம் இரண்டாம் தேதி மாட்டுப் பொங்கல் விழாக் கொண்டாடப்படுகிறது. அன்று மாடுகளை நன்ருகக் குளிப்பாட்டுவார்கள். கொம்புகளுக்கு வர்ணம் தீட்டிக் கழுத்தில் சதங்கைகளைக் கட்டுவார்கள். கொம்பைச் சுற்றி ஒரு புதுத் துணியைக் கட்டுவார்கள். அன்றும் புது அரிசிச் சோறு பொங்கி அதை மாடுகளுக்குக் கொடுப்பார்கள். மாலை வேளையில் மாடுகளை அவிழ்த்துச் சிறிது நேரம் ஓடவிட்டுப்

பின்னர் பிடித்துவந்து கட்டி வைப்பார்கள். "வாயில்லாச் சீவன்" என்று சொல்லக்கூடிய மாடுகளுக்கும் அவற்றின் உழைப்பைப் பாராட்டித் தம் நன்றியை வெளிப்படுத்தும் இந்த வழக்கம் மிகச் சிறந்ததாகும்.

மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள் கன்றுப் பொங்கல் அல்லது காணும் பொங்கல் என்று சொல்லப்படும். அன்று எல்லோரும் தம் நண்பர்களையும் உறவினரையும் கண்டு பேசி வருவார்கள். பொங்கல் நாளில் ஒருவரையொருவர் காணும் பொழுது, "பால் பொங்கிற்று?" என்று கேட்டுக் கொள்வார்கள்.

போகிப் பண்டிகையிலிருந்து தொடங்கி நான்கு நாட்கள் தமிழ் நாடெங்கும் மகிழ்ச்சியும் கொண்டாட்டமுமாயிருக்கும். ஆனி, ஆடி மாதங்களில் தொடங்கிய பயிர்த் தொழில் பெரும்பாலும் மார்கழி மாதத்தில் முடிந்துவிடுகிறது. இந்த வேலையில் ஈடுபட்ட குடியானவர்களின் களைப்பைப் போக்கி, மனத்திற்கு இன்பமும் களிப்பும் தரும் கொண்டாட்டமாக அமைந்துள்ளது இப் பொங்கல் விழா.

இந்திரவிழா	உறவினர்	கழிந்து	வழிபடு
புதுப்பித்து	துடைப்பம்	பாராட்டி	இன்பம்
முற்றுப்பெற்று	தொன்றுதொட்டு	தீட்டி	பதம்
படைப்பார்கள்	பெரும்பாலும்	பண்டிகை	சதங்கை
பொங்கு	பறைகொட்டி	போகி	சீவன்

அருஞ்சொற்பொருள்

முற்றுப் பெற்று - முடிந்து. தொன்று தொட்டு – பண்டைக் கால முதல். பழுதுபார் - குறைகளைச் சரிப்படுத்து. போகி – இந்திரன். படைப்பார்கள் - முன்னே வைப்பார்கள் புரிகின்றன - செய்கின்றன. சீவன் – உயிர்.

வினாக்கள்

1. பொங்கல் விழா நாட்கள், என்று தொடங்கி என்று முடிகின்றன?

2. போகிப் பண்டிகையின் பொழுது வீடுகளை எவ்வாறு தூய்மை செய்கின்றனர்?

3. பழைய பாய், கூடை முதலியவற்றைக் கொளுத்துவது ஏன் நல்லது?

4. முதன் முதல் புது நெல்லரிசி என்றைய தினம் சோருக்கப் படுகிறது? அன்று புதுப்பானையில் பொங்கும் விதத்தை விவரித்து ஐந்து வாக்கியங்கள் எழுது.

5. மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல்—இந்த நாட்களின் சிறப்பு என்ன?

பயிற்சி

(1) உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:—
முற்றுப்பெறு : பழுதுபார் : தொன்றுதொட்டு.

(2) பின்வரும் சொற்களைப் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் வாக்கியங்களில் உபயோகி :—
தை : நெய் : திரி : பார்.
(உ-ம்) 1. நம் நாட்டிற்குப் பாரத நாடு என்று பெயர். (பெயர்ச்சொல்)
2. அவன் கல்வியறிவையே நாடுகிருன். (வினைச் சொல்)

27. பரமார்த்த குருவும் மாணவர்களும்

பரமார்த்தன் என்ற ஒரு குருவுக்கு மட்டி, மடையன். மூடன், முட்டாள், பேதை என்ற ஐந்து மாணவர்கள் இருந் தார்கள். மாணவர்களும் குருவும் ஒருநாள் ஓர் ஊருக்குப் போய்விட்டு வந்து கொண்டிருந்தார்கள். பாதையில் ஓர் ஆறு குறுக்கிட்டது. ஆற்றைக் கண்ட குரு, 'ஆறு விழித் திருக்கிறதோ தூங்குகிறதோ!' என்று எண்ணினர். உடனே மட்டியை அருகில் கூப்பிட்டார். "நீ போய் ஆறு தூங்கு கிறதா, விழித்திருக்கிறதா என்று பார்த்து வா," என ஏவினர்.

ஆற்றின் கரையில் ஒரு குடிசை இருந்தது. அங்கே ஒரு பெண் சமைத்துக் கொண்டிருந்தாள். அடுப்பு எரி வதைப் பார்த்த மட்டி அங்கே போனன். அந்தப் பெண் ணிடம் ஒரு கொள்ளிக்கட்டை கொடுக்குமாறு கேட்டு வாங்கி வந்தான். ஆற்றின் அருகே சென்ருன். அக்கொள்ளிக் கட்டையைத் தண்ணீரில் புகுத்தினன். நெருப்பில் தண் ணீர் பட்டதும் 'சொய்' என்ற ஒலியோடு புகை கிளம்பியது; நெருப்பும் அணைந்துவிட்டது.

ஒலியைக் கேட்ட மட்டி பதறிப்போனன். "ஐயோ! ஆறு விழித்திருக்கிறதே! இப்போது ஆற்றைத் தாண்டக் கூடாது. தாண்டினல் நம்மை அடித்துக்கொண்டு போய் விடும்," என்று அலறிப் புடைத்து ஓடிவந்து குருவிடம் சொன்னன்.

இதைக் கேட்ட குரு மூர்ச்சித்துவிட்டார். பிறகு தெளிந்து, "சிறிது நேரம் காத்திருப்போம். ஆறு தூங்கட்டும்; அப்போது கடக்கலாம்," என்ருர் அறிவாளியான குரு.

மடையன், மூடன் முதலான மாணவர்களும் தூங்காமல் ஆற்றின் கொடுமையைப் பற்றி ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்தனர்.

இரவு கழிந்தது; பொழுது விடிந்தது. அப்போது குதிரை ஒன்றில் மனிதன் ஒருவன் சவாரி செய்துவந்தான். ஆற்றை எளிதாகக் கடந்து சென்ருன். ஏனென்ருல் கணுக்கால் அளவுத் தண்ணீரே ஆற்றில் ஓடிக்கொண்டிருந்தது.

மாணவர்கள் இதைப் பார்த்தார்கள். இவர்களில் ஒருவனை முட்டாள், "அடடே! ஆறு தூங்கிவிட்டது போலும்

அதனால்தான் குதிரையும் மனிதனும் ஆற்றைக் கடந்து விட்டனர்,'' என்று கூவினான்.

உடனே மடையன், "இந்தக் கொள்ளிக் கட்டையால் ஆறு தூங்குவதைக் காணலாம்,'' என்று அணைந்துபோன கட்டையைத் தண்ணீரில் அமுக்கினான். முன்பே நெருப்பு அணைந்துவிட்டதால் ஓசை ஏற்படவில்லை. இதையறியாத மடையன், "ஆறு தூங்கிவிட்டது,'' என்று கூச்சலிட்டான். பேதை, உடனே குருவிடம் போய்ச் சொன்னான்.

குருவும் மாணவர்களும் ஆறு தூங்குகிறது என்ற மகிழ்ச்சியோடு இறங்கினார்கள். 'தப்பினோம், பிழைத்தோம்' என்று அக்கரை சேர்ந்தார்கள்.

அக்கரை சேர்ந்த மாணவர்கள் தலைகால் புரியாமல் துள்ளினார்கள். அப்போது மூடன், "நாம் ஆபத்தில்லாமல் கரை சேர்ந்தது சரிதான். எல்லோரும் வந்து விட்டோமா என்று எண்ணிச் சரிபார்க்க வேண்டுமே,'' என்று சொல்லித் தன்னை விட்டுவிட்டு மற்றவர்களை மட்டும் எண்ணினான். "அடடா! ஐந்து பேர்களே இருக்கிறோம். ஒருவனை ஆறு அடித்துப் போய்விட்டதே!'' என்று சொல்லி அழத் தொடங்கினான். உடனே குரு, "மூடா! அழாதே! நான் எண்ணுகிறேன்,'' என்று சொல்லி ஒவ்வொருவரையும் கையால் சுட்டித் தன்னைச் சேர்க்காமல் எண்ணினார்.

"மூடன் சொன்னது போல ஐந்து பேர்களே இருக்கிறோம்,'' என்று குருவும் வருத்தப்பட்டார். உடனே மட்டி தன்னை விட்டு மற்றவர்களை மட்டும் எண்ணினான். "ஐயோ! ஒருவன் ஆற்றோடு போய்விட்டானே!'' என்றான். இதைப் போல் மடையன், முட்டாள், பேதை ஆகியோரும் எண்ணும் போது தங்களை விட்டு மற்றவர்களை மட்டும் எண்ணினார்கள். ஒருவன் ஆற்றில் மூழ்கி இறந்துபோனான் என்றே தீர்மானித்தார்கள்.

என்ன செய்வது என்று இவர்கள் வருந்திக் கொண்டிருந்தபோது வழிப்போக்கன் ஒருவன் அங்கு வந்தான். இவர்களைப் பார்த்து, "நீங்கள் ஏன் முகவாட்டமாய் இருக்

கிறீர்கள்? என்ன நடந்தது?'' என்று அவன் கேட்டான். பரமார்த்த குரு நடந்ததைச் சொன்னார். வழிப்போக்கன் இவர்களது மூடத்தனத்தை அறிந்தான். இவர்களுக்கு அறிவு கற்பிக்க நினைத்தான்.

"ஐயா, குருவே! நான் ஒரு மந்திரவாதி. ஆற்றோடு போனவனை நான் கொண்டு வருகிறேன் என்ன வெகுமதி தருவீர்கள்?'' என்று கேட்டான்.

உடனே குரு, "அப்பா! என்னிடம் நாற்பத்தைந்து பணம் இருக்கிறது; தருகிறேன்,'' என்றார்.

வழிப்போக்கன் தன்னிடமிருந்த நீண்ட தடியை எடுத்தான். அதன் இரு நுனிகளிலும் இரும்புப் பூண் கட்டியிருந்தது. வழிப்போக்கன், "இதோ பாருங்கள்! நீங்கள் வரிசையாகக் குனிந்துகொண்டு நிற்கவேண்டும். இந்தத் தடியால் முதுகில் ஓர் அடி விழும். அவரவர் தம் பெயரைச் சொல்ல வேண்டும். நான் எண்ணிக்கொள்வேன்,'' என்று சொன்னான். அவர்கள் அவ்வாறே நின்றார்கள்.

வழிப்போக்கன் முதலில் குருவின் முதுகில் தடியால் ஓர் அடி ஓங்கிப்போட்டான். "ஐயோ! நான்தான் பரமார்த்த குரு,'' என்று சொல்லி அப்பால் ஓடினார். இப்படியே அவர்கள் ஒவ்வொருவர் முதுகிலும் ஓர் அடி விழுந்தது. 'நான் மட்டி', 'நான் மடையன்', 'நான் மூடன்', 'நான் முட்டாள்', 'நான் பேதை' என்று கத்திக்கொண்டு மாணவர்கள் அடி வாங்கிக்கொண்டார்கள்.

"இப்போது ஆறுபேர் சரியாக இருக்கிறோம்,'' என்று குரு முதுகைத் தடவிக்கொண்டு சொன்னார்.

வழிப்போக்கன், "என் மந்திரத்தைப் பார்த்தீர்களா? எங்கே வெகுமதி?'' என்று கேட்டான்.

குரு பணத்தை எடுத்துக் கொடுத்தார். வழிப்போக்கன் மூடர்களான குருவையும் மாணவர்களையும் நினைத்துச் சிரித்துக்கொண்டே சென்றான்.

குரு	மாணவர்	பாதை	அப்பால்
வரிசை	கணுக்கால்	அமுக்கினன்	தடவிக்கொண்டு
பதறி	வெகுமதி	கிளம்பியது	தலைகால் புரியாமல்
சவாரி	குனிந்து	முகவாட்டம்	அணைந்துவிட்டது
பேதை	மூடத்தனம்	மந்திரவாதி	அலறி
குறுக்கிடு	மூர்ச்சித்து	இரும்புப்பூண்	கொள்ளிக்கட்டை
புடைத்து	புகுந்து	துள்ளி	ஆபத்து

வினக்கள்

1. ஆறு தூங்குகிறதா விழித்திருக்கிறதா என்பதை அறிய மாணவர்கள் என்ன செய்தார்கள்? என்ன நிகழ்ந்தது?

2. மறுநாட்காலையில் ஆறு தூங்குகிறதென்று எப்படித் தீர்மானித்தார்கள்?

3. ஆற்றைக்கடந்தபின் ஒருவனை ஆறு இழுத்துச்சென்றுவிட்டது என்று ஏன் எண்ணினர்கள்?

4. வழிப்போக்கன் அவர்களில் யாரையும் ஆறு இழுத்துச் செல்லவில்லை என்று எப்படி நிரூபித்தான்?

பயிற்சி

(1) ஆரும் வேற்றுமை: இதன் உருபுகள் அது, ஆது, அ என்ற மூன்றுமாகும். உடைய என்ற சொல்லும் இந்த வேற்றுமையின் உருபாக வரும்.

(உ-ம்) இராமனது புத்தகம்.
என்னுடைய தந்தை.

[ஆது, அ என்ற உருபுகள் செய்யுட்களில் மட்டும் வரும். உரை நடையில் பெரும்பாலும் வருவதில்லை.]

(2) ஏழாம் வேற்றுமை: இவ்வேற்றுமையின் உருபுகள் கண், இல், உள், மேல், கீழ் முதலிய பலவாகும்.

[இவை எல்லாம் இடத்தைக் குறிப்பவை]

(உ-ம்) மரத்தின் கண் பறவை.
விளக்கில் ஒளி.
வீட்டினுள் திருடன் இருக்கிறன்.
மேசையின்மேல் புத்தகம் உள்ளது.

(3) நான், நீ, மரம், குரங்கு ஆகிய சொற்களை ஆரும் வேற்றுமையிலும் ஏழாம் வேற்றுமையிலும் அமைத்து வாக்கியங்கள் எழுது.

28. ஆலமரம்

ஆயிரம் கிளைகள் கொண்ட
அடிமரம் பெரிய யானை !
போயின மிலார்கள் வானில் !
பொலிந்தன பவளக் காய்கள் !
காயினை நிழலாற் காக்கும் !
இலையெலாம், உள்ளங் கைகள் !
ஆயவூர் அடங்கும் நீழல்,
ஆலிடைக் காண லாகும் !

—பாரதி தாசன்

மிலார் உள்ளங்கை பொலிந்தன நீழல்

வினா

செய்யுளின் கருத்தையொட்டி ஆலமரத்தைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

29. மாதிரிக் கடிதங்கள்

1. அழைப்புக் கடிதம் (நண்பனுக்கு)

13, பெருமாள் கோவில் தெரு,
தல்லாகுளம், மதுரை.
15—10—'58

அன்புள்ள வேணுவுக்கு,

நலம். எனது அண்ணனின் திருமணம் திருச்சியில் 20—10—'58 அன்று நடைபெற இருக்கிறது. அதற்கு நீ தவருது வரவேண்டும். இக்கடிதத்துடன் திருமண அழைப் பிதழையும் அனுப்பியுள்ளேன். உன் வரவை மிக்க ஆவலு டன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன்.

எனது வணக்கத்தை உன் பெற்ருேர்களுக்குச்சொல். உன் தம்பி சேதுவை நான் கேட்டதாகக் கூறவும்.

இங்ஙனம்,
உனது அன்புள்ள,
க. வேலன்.

முகவரி :
க. வேணுகோபாலன்,
15, பெரிய கடைத் தெரு,
பெரியகுளம்.

2. மகன் தந்தைக்கு

25, நாவலர் தெரு,
புதுநகர், சென்னை.
15—10—'58

அன்பார்ந்த அப்பா!

வணக்கம். கடவுள் அருளால் இங்கு யாவரும் சுகம். அங்கே நம்மவர்களின் நலத்தை அறிய ஆவலாயிருக் கிறேன்.

தாங்கள் ஒரு வாரத்துக்கு முன் எழுதிய கடிதத்தைப் பார்த்து மகிழ்ந்தேன். தாங்கள் எழுதியுள்ளபடி நான் கவனமாய்ப் படிக்கிறேன். சென்ற மாதத்தில் நடந்த கால்

ஆண்டுத் தேர்வில் எல்லாப் பாடங்களிலும் நூற்றுக்கு அறுபதுக்கு மேல் 'குறியெண்கள்' வாங்கியிருக்கிறேன். இங்கே மாமா எனக்குத் தேவையான புத்தகங்களை எல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறார். என்மீது அன்பாயிருக்கிறார்.

இங்கே இரண்டு நாட்களாகப் பெருமழை பெய்கிறது. சாலையில் முழங்கால் அளவு தண்ணீர் செல்கிறது. அங்கே மழையுண்டா? தம்பி மணி நன்றாகப் படித்து வருகிறானா?

தங்கள் கீழ்ப்படிதலுள்ள,
நடராசன்.

முகவரி :

திரு. கே. தியாகராச பிள்ளை,
18, புதுத்தெரு, தஞ்சாவூர்.

பயிற்சி

1. உனக்கு உடல் நலம் சீர்கெட்டிருப்பதால் ஒரு வாரம் விடுமுறை வேண்டுமென்று உன் வகுப்பு ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுது.

2. உன்னுடைய ஊரில் நடக்கும் கோவில் திருவிழாவைப் பார்க்க வருமாறு உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

3. உனக்குச் சில புத்தகங்களைப் பரிசு அளிக்குமாறு உன் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுது.

30. நன்றியற்ற பாம்பு

வட நாட்டில் ஒரு பாலை நிலம் உள்ளது. அங்கே மரஞ் செடிகொடிகள் செழிப்பாக வளரமாட்டா. ஆங்காங்குச் சில புதர்ச் செடிகளே காணப்படும்.

அந்தப் பாலை நிலத்தின் வழியே ஒரு நாள் ஒரு வணிகன் தனது ஒட்டகத்தின்மீது அமர்ந்து பயணஞ்செய்து கொண்டிருந்தான். அப்பொழுது வெயில் நன்கு காய்ந்து கொண்டிருந்தது. எங்கும் ஒரே வெப்பமாக இருந்தது.

அவ்வணிகன் சென்ற வழிக்கு அருகே இருந்த ஒரு புதர் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தது. அவன் அதன் அருகே சென்று பார்த்தான். புதரின் நடுப்பகுதி இன்னும்

தீப்பற்றவில்லை. அங்கிருந்து தவித்த ஒரு பாம்பு வணிகனை நோக்கி, "ஐயோ! தீ என்னைச் சூழ்ந்து எரிகிறதே! என்னை வெளியே எடுத்து விட்டால் உனக்கு ஒரு பரிசு தருவேன்," என்றது.

வணிகன் இளகிய நெஞ்சமுடையவன். உடனே அவன் ஒட்டகத்தினின்று இறங்கி, தன் கையிலிருந்த ஒரு கோலின் நுனியில் ஒரு பையைக் கட்டி, அதைப் புதரின் நடுவே நீட்டினான். பாம்பு பையினுள் புகுந்து கொண்டது. உடனே அவன் அதைப் புதருக்கு வெளியே விடுத்தான்.

பையிலிருந்து தரையில் குதித்த பாம்பு வணிகனைக் கடிக்கச் சென்றது. அவன் திடுக்கிட்டு, "மரணத்தினின்று உன்னைத் தப்பவைத்த எனக்கு நீ தரும் பரிசு இதுதானா? நான்கு பேரிடம் இதைச் சொல்வோம். அவர்கள் சொல்லும் நியாயத்திற்கு நான் கட்டுப்படுகிறேன்," என்றான்.

அவன் கூறியதற்குப் பாம்பு இணங்கியது. ஒட்டகமும் பாம்பும் பின்தொடர வணிகன் சிறிது தூரம் சென்றான். அங்கு ஒரு பசு மேய்ந்துகொண்டிருந்தது. அதனிடம் வணிகன் வழக்கைக் கூறினான். அதைக் கேட்ட பசு, "மனிதர்கள் நன்றியற்றவர்கள். என்னிடமுள்ள பால் முழுதும் கறந்து கொள்ளும் ஒரு மனிதன் எனக்குப் போதிய தீனி போடுவதில்லை. ஆகவே பாம்பு மனிதர்களைக் கடிக்கலாம்," என்றது.

இதைச் செவியுற்ற பாம்பு வணிகனைப் பார்த்து, "இப்பொழுது என்ன சொல்கிறாய்?" என்று கேட்டது.

வணிகன், "இன்னும் சிலரைக் கேட்க வேண்டும். ஒருவர் சொல்வதைக் கொண்டே முடிவு செய்யக் கூடாது," என்றான்.

மேலும் சிறிது வழி நடந்த பிறகு ஒரு மரம் எதிர்ப்பட்டது. வணிகன் மரத்தினிடம் தன் வழக்கை எடுத்துரைத்தான்.

மரம் கூறியது: "மனிதர்களுக்கு நாங்கள் காய்களை யும் பழங்களையும் தருகிறோம். இளைப்பாற நிழல் அளிக்கி றோம். ஆனால் அவர்கள் எங்களை வெட்டுகிறார்கள். மனிதர் கள் நன்றி கெட்டவர்கள்."

உடனே பாம்பு வணிகனை நெருங்கியது. அவன் அஞ்சி, "இன்னும் ஒருவரையேனும் கேட்க வேண்டும்," என்றான். பாம்பு ஒப்புக்கொண்டு மனிதனைப் பின் தொடர்ந்தது.

ஒரு பாறை மீது ஒரு நரி உட்கார்ந்திருந்தது. வணி கனும் பாம்பும் அந் நரியை நெருங்கியதும், பாம்பு அதனிடம் தன் வழக்கைக் கூறிவிட்டு, "மனிதர்களைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் ?" என்று கேட்டது.

நரி பாம்பை நோக்கி, "நீ ஏன் பொய் சொல்கின்றாய் ? அந்தப் பையினுள் உன்னால் எப்படிப் புக முடியும்? நீ சொல்வதை நான் நம்ப முடியாது," என்றது.

பாம்பு, "இந்தப் பையினுள் என்னால் புகமுடியா தென்று சொல்கிறாய்? இதோ செய்து காட்டுகிறேன், பார் !" என்று கூறிவிட்டு வணிகனைப் பார்த்து, "பையைத் திற," என்றது.

வணிகன் மனத்தினுள் நகைத்துக்கொண்டு, பையைத் திறந்தான். நொடிநேரத்தில் பாம்பு அதனுள் புகுந்தது. வணிகன் தாமதமின்றிப் பையின் வாயைச் சுருக்கிக் கட்டிவிட்டான்.

நரி வணிகனிடம், "நன்றியற்ற பாம்பைக் கொன்றுவிட்டு மறுவேலை பார்," என்று கூறியது.

வணிகன் அவ்வாறே செய்தான். தன் உயிரைக் காத்த நரிக்கு வணக்கம் செலுத்தினன்.

தவித்த	மரணம்	திடுக்கிட்டு	புகுந்து
சூழ்ந்து	இணங்கு	நியாயம்	நகைத்து
இளகிய	விடுத்தான்	தூரம்	செவியுற்ற
சுருக்கி	தப்பவை	நொடிநேரம்	பாலைநிலம்
எதிர்ப்படு	கட்டுப்படு	நன்றியற்றவன்	தாமதம்
பரிசு	நீட்டினன்	நடுப்பகுதி	பின்தொடர

வினுக்கள்

1. பாம்புக்கு வணிகன் என்ன உதவி செய்தான்?
2. பசு மனிதனைப்பற்றி என்ன கூறியது?
3. மரம் மனிதனைப்பற்றி என்ன சொல்லியது?
4. நரி என்ன தந்திரம் செய்து மனிதனைக் காத்தது?

பயிற்சி

(1) எட்டாம் வேற்றுமை: இவ் வேற்றுமைக்கு உருபு இல்லை. தூரத்திலுள்ள ஒருவரையோ அருகிலுள்ள ஒருவரையோ தன் முகமாக அழைக்கும் பொழுது இந்த வேற்றுமையில் பெயர்ச் சொற்கள் வரும். இதற்கு விளி வேற்றுமை என்னும் பெயருமுண்டு. (விளித்தல்—அழைத்தல்.) பெயர்ச்சொற்கள் சிறிது மாறி இந்த வேற்றுமையின் பொருளைத் தரும்.

(உ-ம்) தம்பீ இங்கே வா.
அண்ணா எனக்கு உதவி செய்.
புலவரே, நன்கு பேசினீர்!

(2) பையன், பெண், தங்கை ஆகிய சொற்களை எட்டாம் வேற்றுமையில் அமைத்து வாக்கியங்கள் எழுது.

(3) பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களின் வேற்றுமைகளைக் கூறு :—

1. வணிகன் மரத்தினிடம் தன் வழக்கை எடுத்துரைத்தான்.
2. அந்தப் பையினுள் உன்னால் எப்படிப் புக முடியும்?
3. வணிகன் தனது ஒட்டகத்தின் மீது ஏறிச் சென்றான்.
4. மாணவர்களே, பாடங்களை நன்றாகப் படியுங்கள்.

31. சேரன் அளித்த பரிசு

காட்சி 1

இடம் : இளஞ்சேரலிரும்பொறையின் அரசவை.

நேரம் : பிற்பகல்.

உறுப்பினர்கள் : இளஞ்சேரலிரும்பொறை, அமைச்சர், பிரபுக்கள், பெருங்குன்றூர்க் கிழார், வாயிற் காவலன்.

வாயிற்காவலன் : அரசே! வணக்கம். வாயிலில் ஒரு புலவர் வந்துள்ளார். பெருங்குன்றூரிலிருந்து வந்திருப்பதாகச் சொல்கிறார்.

இரும்பொறை : அவர், நாம் கேள்வியுற்ற பெரும் புலவரான பெருங்குன்றூர்க் கிழாராகத் தானிருப்பார். உடனே அழைத்துவா.

[காவலன் செல்கிறான்.

அமைச்சர் : நம் நாட்டில் வாழும் புலவர்களுக்கெல்லாம் தலைவர் எனத்தகும் சிறப்புடையவர் பெருங்குன்றூர்க் கிழார்.

[சோர்வுற்ற நிலையில் புலவர் நுழைகிறார்.

இரும்பொறை : (எழுந்து எதிர்கொண்டு) புலவரே, வாருங்கள்! சோர்வுடன் காணப்படுகிறீர்களே! என் அருகிலுள்ள ஆசனத்தில் அமருங்கள்.

பெ. கிழார் : அரசே, வாழ்க! பல காதவழி நடந்து வந்துள்ளேன். தங்களைக் கண்டதும், மழை கண்ட பயிர் போல் என் வாட்டம் நீங்கிவிட்டது.

இரும்பொறை : சில நாட்களாகத்தான் எம் அவைப் புலவர் வாயிலாகத் தங்களுடைய கல்விப் பெருமையையும் செய்யுளியற்றும் ஆற்றலேயும் செவியுற்றேன். தங்களுடன் அளவளாவி மகிழவேண்டுமென எண்ணியிருந்தேன்; தாங்களே இங்கு வந்ததை எனக்குற்ற பெரும் பேருகக் கருதுகிறேன்.

பெ. கிழார் : தமிழ் நாட்டில் புலவர் பேசுவதெல்லாம் தங்களுடைய புகழாகவே இருக்கின்றமையால், தங்களேக் காணப் பெரிதும் விரும்பி வந்துள்ளேன்.

இரும்பொறை : அமைச்சரே! வழி நடந்து களேத்துள்ள புலவரை இப்படியே உட்கார வைத்துப் பேசிக்கொண்டு இருப்பது நமக்கு அழகன்று. இவரை அழைத்துச் சென்று, தங்குவதற்கு விடுதி ஏற்பாடு செய்யுங்கள். அறுசுவை உண்டி அருந்தியபின் அலுப்புத் தீர ஓய்வெடுத்துக் கொள்ளட்டும்.

அமைச்சர் : எல்லா வசதிகளும் தயாராயுள்ளன. புலவரே, வாருங்கள்.

பெ. கிழார் : மன்னர் பிரானே, நின் கொடையும் கொற்றமும் என்றும் சிறக்கட்டும் !

காட்சி 2

இடம் : அரசவை.

நேரம் : முற்பகல்.

உறுப்பினர்கள் : அரசன், அமைச்சர், பெருங்குன்றூர்க் கிழார், படைத் தலேவர்.

இரும்பொறை : புலவர் பெருமானே! இங்கு ஏவலர் தங்களுக்குத் தேவையான வசதிகளெல்லாம் செய்து தருகிறார்களா ?

பெ. கிழார் : கற்பக மரத்தை அண்டி நிற்கும் ஒருவருக்கு விரும்பியதெல்லாம் கிடைப்பதில் வியப்பு என்ன உள்ளது! ஆனல், சில நாட்களாக நான் எனது சிற்றூருக்குத் திரும்பிச் செல்ல விரும்பியதற்குத் தாங்கள் ஏதும் மறுமொழி கூறவில்லே.

இரும்பொறை : தாங்கள் இங்கு வந்து சில நாட்களே ஆகி யுள்ளன ; இதற்குள் தங்களை விட்டு நான் எப்படிப் பிரியமுடியும் ?

பெ. கிழார் : சில நாட்களா ! நான் இங்கு வந்து இரண்டு திங்கள்களாகிவிட்டன.

[படைத் தலைவர் விரைந்து வருகிறார்.

இரும்பொறை : படைத் தலைவரே ! ஏன் இத்துணை விரைவு?

படைத் தலைவர் : சில குறுநில மன்னர்கள் ஒன்றுகூடி நம் மீது படையெடுத்து வருகிறார்களாம் ! ஒருகாதத் தொலை வில் அவர்கள் படை வருவதாக ஒற்றர்கள் செய்தி சொன்னார்கள்.

இரும்பொறை : (எழுந்து, சினத்துடன்) படையெடுப்பா ? குறு நில மன்னர்களா ? அவர்களுக்கு இத் துணிவு எங்கிருந்து பிறந்தது ? அமைச்சரே, படைத் தலைவரே, உடனே புறப்படுங்கள் !

படைத் தலைவர் : நம் படைவீரர்கள் நகர்ப்புறத்தில் கூடி விட்டனர். தங்களது வருகையை எதிர்நோக்கி நிற் கின்றனர்.

[அரசர், அமைச்சர், படைத் தலைவர் விரைந்து செல் கின்றனர்.

பெ. கிழார் : சரிதான் ! அரசர் எப்பொழுது திரும்பி வரு வாரோ ! இனிக் காத்திருந்து பயனேதுமில்லை. பசி யால் வாடும் மனைவி மக்கள் உயிருடனிருக்கிறார்களா என்பதையேனும் பார்க்கச் செல்வேன்.

காட்சி 3.

இடம் : பெருங்குன்றூர்.

நேரம் : மாலை.

உறுப்பினர்கள் : பெருங்குன்றூர்க் கிழார், அவர் மனைவி மக்கள், ஊர்த் தலைவர்.

பெ. கிழார் : (தமக்குள்) இதுவா பெருங்குன்றூர் ? எதிரே பெரிய மாளிகைகள் எப்பொழுது முளைத்தன ? சரி

யான வழியில் தானே வந்திருக்கிறேன்! இந்தக் குடிசைகள் எல்லாம் பெருங்குன்றூரைச் சேர்ந்தவையே. ஆனால் அந்த மாட மாளிகைகள்?

[ஊர்த் தலைவர் வருகிறார்.

ஊர்த் தலைவர் : புலவரே, வாருங்கள், வாருங்கள்! தங்களுடைய புலமையால் இவ்வூரே பெருமைபெற்றுள்ளது.

பெ. கிழார் : இது நம் ஊரா? இந்த மாளிகைகள் எப்பொழுது கட்டப் பெற்றன ?

ஊர்த் தலைவர் : உங்கள் வீடே உங்களுக்கு அடையாளம் தெரியவில்லையே! வாருங்கள் உங்கள் மாளிகைக்கு.

பெ. கிழார் : என் மாளிகையா? ஏழையை ஏளனம் செய்வது எல்லோருக்கும் எளிதுதான்.

[பெரிய மாளிகையிலிருந்து புலவரின் மனைவியும் மக்களும் வெளிவருகின்றனர்.

புலவரின் மனைவி : வாருங்கள் உள்ளே! இதுதான் நம் வீடு.

பெ. கிழார் : (திகைத்து நின்று,) நான் கனவுதான் காண்கிறேன்!

புலவரின் மனைவி : கனவொன்றுமில்லை. நீங்கள் சேரமான் தலைநகருக்குச் சென்ற சில நாட்களுக்குப் பிறகு, ஒரு கனவானும் நூற்றுக் கணக்கான ஆட்களும் இங்கே வந்தார்கள். தாங்கள் அனுப்பியதாகச் சொன்னார்கள். நமக்கு இந்த மாளிகையை அமைத்தார்கள். ஊர்ப் பொது மண்டபம், கோவில் இவற்றையெல்லாம் புதுப்பித்தார்கள். இவ்வூர் வருவாயை நமக்கே அளித்து விட்டுச் சென்றார்கள். அன்றுமுதல் தங்கள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

பெ. கிழார் : ஆ! இரும்பொறையின் பெருந்தன்மை யறியாது, அவர்பால் வருத்தமுற்றுத் திரும்பிவந்தேனே! இத்தகைய உத்தம வள்ளல் வேறு யாருளர்? அவர்

புகழ் பாடுவதையே இனி என் தொழிலாகக் கொள்வேன்! வாழ்க இளஞ்சேரலிரும்பொறை!

யாவரும்: வாழ்க, வாழ்க நம் மன்னர்!

திங்கள்	அளவளாவி	அலுப்புத்தீர
கொற்றம்	அடையாளம்	கொடை
காதவழி	விடுதி	மறுமொழி
ஒற்றர்	அறுசுவை	ஏவலர்
வாயிலாக	உண்டி	கற்பகம்
ஆற்றல்	அருந்தியபின்	வள்ளல்
புலமை	குறுநில	வருவாய்
ஏளனம்	கனவான்	பெருந்தன்மை
புதுப்பி	துணிவு	எதிர்நோக்கி
வருகை	மண்டபம்	புகழ்பாடுதல்
பெரும்பேறு	மாடமாளிகை	

பயிற்சி

1. இந்த நாடகத்தை நடித்துக் காட்டுங்கள்.
2. புலவர் அறியாமல் இரும்பொறை அவருக்கு எப்படிப் பரிசு அளித்தான் என்பது பற்றி ஒரு பத்தி எழுதுக.

32. ராஜா தேசிங்கு

தோன்றமல்லன் செஞ்சிக்குப் போகுதல்

அரண்மனைவிட்டு வெளியேவந்தான் தோன்றமல்லனும்
அதற்குமுன்னே தயாராச்சுது பட்டத்து யானையும்
ஆனைக்கொம்புக்கு கத்திகட்டினன் தோன்றமல்லோஜி
செஞ்சிக்கோட்டைக்குப் பயணமானன் தோன்றமல்லனும்.
கணகணகணகண கணகணவென்று கத்திகள் மின்னுதுபார்
பளபளபளபள பளபளவெனன்று பட்டாமின்னுதுபார்
தடதடதடதட தடதடவென்று குதிரைகள் நடக்குதுபார்
இங்கேயடித்த நகாருசத்தம் திமிரியிற்கேட்குது.
அந்தவேளையி லென்னசெய்கிருன் ஷேக்முகம்மதையா?

தோன்றமல்லனை ஷேக்முகம்மது காணல்

எதிரிளவனே வந்தானென்று ஷேக்முகம்மதுவும்
முந்நூறுகுதிரை தயார்பண்ணினன் ஷேக்முகம்மதுவும்
தோன்றமல்லனைக் கண்ணாலேகண்டான் ஷேக்முகம்மதுவும்
பதில்சலாமுங் கொடுத்தானையா தோன்றமல்லனும்.
"எங்கேயிருந்து எங்கேபோறீர் தோன்றமல்லண்ணா?
இங்கே வந்த வயணமென்ன தோன்றமல்லண்ணா?
நேற்றைநிலுவை பைசாபணமும் கட்டியனுப்பினேன்.
இன்றையநிலுவை பைசாபணமும் கட்டப்போகிறேன்.
என்சீமையில் நகாருபோட வயணமென்னவையா?
அந்தவார்த்தைக் கென்னசொல்கிருன் தோன்றமல்லனும்:
"சண்டைக்குவரலை சாடிக்குவரலை ஷேக்முகம்மதையா
செஞ்சிக்கோட்டைப் பணத்துக்குப்போறேன் ஷேக்முகம்மதையா."
அந்தப்பேச்சை காதிலேகேட்டான் ஷேக்முகம்மதையா:
"நானொருவார்த்தை சொல்லுகிறேன் கேளும் தோன்றமல்லண்ணா!
அவனுமகா சூரனையா ராஜாதேசிங்கு
செஞ்சிக்கோட்டை சிப்பாயையா ராஜாதேசிங்கு
கத்திபிடித்த சிப்பாய்மகனும் ராஜாதேசிங்கு
அவன், கண்ணையுருட்டிப் பார்த்தானுனல் சிப்பாய்தேசிங்கு
கால்பலங்களும் கைபலங்களும் கதறியோடுமேதான்!
சண்டைபண்ணி ஜெயிக்கமாட்டாய் தோன்றமல்லண்ணா!"
அந்தப்பேச்சை காதிலேகேட்டான் தோன்றமல்லோஜி:
"என்னபேச்சு பேசினயடா ஷேக்முகம்மதையா
அவனுடைசூரம் எனக்குத்தெரியும் ஷேக்முகம்மதையா
செஞ்சிக்குச்சென்று எந்தன்வலுமையைத் தெரியக்காண்பிக்கிறேன்
போய்வரேன் போய்வாரேன் ஷேக்முகம்மதையா!"

தேசிங்குராஜன் பாளையப்பட்டரைக் கொலுவுக்கு வரவழைத்தல்

நாராயணகோவிந்தாவென்று கோட்டைக்குள்ளே வந்தான்
சதுர்முன்னுக்கு வந்தானையா தோன்றமல்லனும்
முழங்கால்சீலை போட்டேயவனு முன்னேசலாஞ்செய்தான் ;
பதில்சலாமுங் கொடுத்தானையா ராஜாதேசிங்கு
கண்ணாலேகண்டு தோன்றமல்லனை கடுகச்சொல்லுற்றான் :
"நீ—இங்கேவந்த வயணமென்ன தோன்றமல்லண்ணா ?
எனக்குஇருபத் திரண்டுவயது இப்போதாச்சு
இத்தனைநாளாய் நவாப்புசேனைகள் இங்கேவந்ததில்லை.
உயிர்கொடுக்க செஞ்சிக்கோட்டைக்கு உகந்துவந்தீரோ ?
தைரியங்கொண்டு செஞ்சிக்கோட்டைக்குச் சார்ந்துவந்தீரோ?
என்சீமையிலே நகாருபோட என்னவலுமைகொண்டீர் ?
சல்திசல்தி சொல்லுமென்"றான் ராஜாதேசிங்கு.
அந்தப்பேச்சைக் காதிலேகேட்டான் தோன்றமல்லனும்
கால்நடுங்கி கைநடுங்கி காலில்விழுந்தானும் :
"சலாமையா சலாமையா ராஜாதேசிங்கு
நான்-சண்டைக்குவரவில்லை சாடிக்குவரவில்லை ராஜாதேசிங்கு
கோபமில்லாமல் என்னுடைபேச்சை சற்றேகேளுமையா !
நூற்றெழுபத்திரண்டு பாளையப்பட்டு நவாப்புக்காணும்
செஞ்சிக்கோட்டைப் பணமும்வரவில்லை ராஜாதேசிங்கு
தோப்புருபணமும் வேறேகிடக்குது பழம்செஞ்சியிலே
தோப்புருநிலுவைக்கு வந்தேனையா ராஜாதேசிங்கு."

33. வாழிய கொடியே!



பல்லவி

கொடியைக் கும்பிடுவோம்—நம்முடைய நாட்டின்
கொடியைக் கும்பிடுவோம்.

சரணம்

எந்தக் கடவுளை எவர்தொழுதாலும்
எத்தனை வேற்றுமை நமக்கிருந்தாலும்
இந்தியர்க் கெல்லாம் பொதுவாம் தெய்வம்
இந்தக் கொடியே இதிலென்ன ஐயம்! (கொடி)
சத்தியப் பாறையில் வேர்ஊன் றியகொடி
சாந்தக் கோலின் உச்சியில் மணிமுடி
நித்திய மாகிய சுதந்திர வாழ்வினை
நித்தமும் நினைத்திட நின்றெமை ஆள்வது. (கொடி)
ஏழையும் செல்வனும் எனதென தென்றே
எல்லோரும் தொழ நடுவில் நின்றே
வாழிய வையகம் வாழ்ந்திட வேண்டி
வாழிய கொடியே! வாழ்க பல்லாண்டும்! (கொடி)

—வெ. ராமலிங்கம் பிள்ளை

நித்தம்	நித்தியம்	வாழ்வு	சத்தியப்பாறை
வையகம்	ஊன்றிய	மணிமுடி	சாந்தக்கோல்

பயிற்சி

நம் கொடியின் சிறப்பைப்பற்றி நாலைந்து வரிகள் எழுது.

34. கட்டபொம்மன்

கும்பினி யார்சீமை நெல்லையெல் லாம்வாரிக்
கொள்ளைகொண் டான்அந்தக் கம்பளத்தான் ;
கும்பினி யான்பேரில் ஆணையிட் டானந்தக்
கொள்ளை கொடுத்தபிற் கட்டுமேசர்.
கும்பினி யாணை தலைக்குமே லேஎன்று
கொள்ளைகொண் டான்அந்தக் கம்பளத்தான் ;
கும்பினியாரிடம் பிற்கட்டு மேசருங்
கூக்குரல் போட்டானே பட்டணத்தில்.
பிள்ளை மகனாலே வந்தகொள்ளை யென்று
பிற்கட்டு மேசரு ரைத்திடவே
வல்லவ னான கெவுனர் துரையந்த
வசனம் கேட்டங்கே கோபமுற்றான்.
காகிதம் வந்துதே பாஞ்சைப் பதித்துரை
கட்ட பொம்முபிர தானியிடம்
தாக்கீ தாய்வந்த கும்பினிக் காகிதம்
தன்னைவா சித்தானே பிள்ளைமகன்.
" வானம் பொழியுது பூமி விளையுது
மன்னவன் கும்பினிக் கேன்கொடுப்பேன் ?
சீனிச்சம் பாநெல்லு ஏன்கொடுப் பேன்அந்தச்
சீரகச் சம்பாநெல் ஏன்கொடுப்பேன் ?
" என்னைப்போல் வெள்ளாண்மை இட்டா னோதுரை
இங்கி லீசுவெள்ளைக் காரனுந்தான்
மன்னவன் கும்பினி வந்தக் கால்கத்தி
வாள்முனை யில்கிஸ்திப் பணமெ"ன்றான்.
" தானிய தவச மேன்கொடுப் பேன்குலத்
தம்பிரா னோஅந்தக் கும்பினியான் ?
நானும் உழுது விதைக்கும் போதுஅவர்
தானு முழவுக்கு வந்தாரோ ?
" சனமோ சாதியோ கும்பினி யான்நமது
சம்பந்தக் காரனோ கும்பினியான் ?
மனது போலே நடப்பே னோதிசை
மகிழும் கம்பளச் சிங்கேறு ?

"எத்திசை யும்புக ழுமைத் துரையென்று
எண்ணுமல் கேட்டானே கிஸ்திப்பணம் ?
சத்துரு வானுனே கும்பினி யானவன்
சமத்தைப் பார்க்கிறேன் கம்பளத்தான் !"
கட்டபொம் மனந்தக் காகிதம் வாங்கியே
கந்து கந்தாய்க் கிழித்துருட்டி
சட்டமா யிந்த மேலநீ ராவித்
தண்ணியில் போடென் றெறிந்துவிட்டான்.
எத்தனை நாளாச்சு காயிதங் கள்போட்டு
இன்னும்வ ரக்காணும் பார்த்தீரோ ?
சத்துரு வானுனே கம்பளத் தானவன்
சமத்தி னுலேநி ராகரித்தான்.
" கத்தி வெடிகளும் கட்டாரி யீட்டியும்
கல்லுவெ டியுந்தயா ரெ"ன்றுனே.
பத்தி யெழுப்பும் சபாரியென் ருரங்கே
பாஞ்சைப் பதியிலே தீனியென்ருர்.
கிண்ணிப்பட் டாளமும் வருகு தேவலு
கிரண்டபட் டாளமும் பெருகுதே !
எண்ணத் தொலையாத பட்டாள மங்கே
ஏகமாய் வந்துதே மெட்டாக.
மின்ன லதுவெட்டிப் பார்த்தாப் போல்கன
மேகங்கள் ஒன்ருகச் சேர்ந்தாற்போல்
சின்னப் பிறட்டன் பெரிய பிறட்டனும்
சேர்ந்தங்கே வாட்டன் துரையுடனே.
பக்கா ளித்துரை பறட்டன் துரையுடன்
பக்காநாட் டுத்துரை வாட்டனுமே
எக்களிப் பாகவே நெருக்கு ருர்ஒரு
மிக்கத் திரண்டுவந் திறங்குருர்.

செய்யுள்கள்

நல்வழி

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்றருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா. 1

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல். 2

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்! 3

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. 4

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு
மாண்டார் வருவரோ மானிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 5

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாருமங் கில்லை—சுரந்தமுதங்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். 6

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம். 7

ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வ
மாறிடு மேறிடு மானிலத்தீர்—சோறிடுந்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து. 8

ஒருநா ளுணவை யொழியென்ரு லொழியாய்
இருநாளுக் கேலென்ரு லேலாய்—ஒருநாளும்
என்னே வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னேடு வாழ்த லரிது. 9

நீதி வெண்பா

மென்மதுர வாக்கால் விரும்புஞ் சகங்கடின
வன்மொழியி னுலிகழு மண்ணுலகம்—நன்மொழியை
ஓதுகுயி லேதங் குதவியது? கர்த்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று? 1

பகைசேரு மெண்ணுன்கு பற்கொண்டே நன்னு
வகைசேர் சுவையருந்து மாபோற்—ருகைசேர்
பகைவரிட மெய்யன்பு பாவித் தவராற்
சுகமுறுத னல்லோர் தொழில். 2

வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான். 3

கண்ணிரண்டே யாவர்க்குங் கற்ருேர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி யேழாகு மீவோர்க்கு—நண்ணும்
அநந்தந் தவத்தா லருண்ஞானம் பெற்ருேர்க்
கநந்தம் விழியென் றறி. 4

ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம். 5

கர்ப்பூரம் போலக் கடலுப்பிருந் தாலுங்
கர்ப்பூர மாமோ கடலுப்புப்—பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல். 6

சீலமில்லா னேதேனுஞ் செப்பிடினுந் தானந்தக்
கால மிடமறிந்து கட்டுரைத்தே—ஏலவே
செப்பமவ னுந்தானே சிந்தைநோகா தகன்று
தப்புமவ னுத்தமனே தான். 7

சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்ப ரான்றமைந்த
முற்றுணர்வோ ரொன்று மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி னுண்டோ வொலி. 8

தாமுங்கொடார் கொடுப்போர் தம்மையுமீ யாதவகை
சேமஞ்செய் வாருஞ் சிலருண்டே—யேமநிழல்
இட்டுமலர் காய்கனிக ளீந்துதவு நன்மரத்தைக்
கட்டுமுடை முள்ளெனவே காண். 9

பொன்னுங் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்று நலிந்தாலு முத்தமர்பால்
நற்குணமே தோன்று நயந்து. 10

திருவேங்கட சதகம்

இவர்க்கிவை வேண்டாமெனல்

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல் வேண்டாம்;
பின்னென்று முன்னென்று பேசியே யவமானப்
பேர்கொண்டு திரிதல் வேண்டாம்;
உற்றவர்கள் போலவுட் பகையான வஞ்சகரை
யொருநாளு நம்பல் வேண்டாம்;
யொருவருக் கிச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்சபையி
லூமைபோ னிற்றல் வேண்டாம்;
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டையிற்
ருன்போய் விலக்கல் வேண்டாம்;
தைரியந் தனில்விக்ர மாதித்த னென்னினுந்
தன்னையே புகழல் வேண்டாம்;
மற்றென்று மெண்ணுது செய்யல்வேண் டாமென்பர்
மணவாள நாரா யணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரத வேங் கடராயனே!

—நாராயண பாரதி

தண்டலையார் சதகம்

நற்பிள்ளை யொன்றிருந்தால் போது மென்பது

நன்றிதரும் பிள்ளையொன்று பெற்ருலுங்
குலமுழுது நன்மை யுண்டாம்
அன்றியறி வில்லாத பிள்ளையொரு
நூறுபெற்று மாவ துண்டோ!
மன்றினடம் புரிவாரே தண்டலையா
ரேசொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல வீன்றுமென்ன குஞ்சரமொன்
றீன்றதனுல் பயனுண் டாமே.

—படிக்காசுப் புலவர்

குமரேச சதகம்

இதினுமிது நன்றென்பவை

கடுகடுத் தாயிரம் செய்வதில் இன்சொலால்
　　கனிகொண் டழைத்தல் நன்று ;
கனவேள்வி ஆயிரஞ் செய்வதில் பொய்யுரை
　　கருத்தொடு சொலாமை நன்று ;
வெடுவெடுக் கின்றவோர் அவிவேகி உறவினில்
　　விவேகியொடு பகைமை நன்று ;
வெகுமதிக ளாயிரஞ் செய்வதின் அரைக்காசு
　　வேளைகண் டுதவல் நன்று ;
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்கு
　　சற்றுமிலை என்னல் நன்று ;
சம்பத் துடன்பிணியின் மெலிகுவதில் நோயற்ற
　　தாரித்தி ரியநன்று காண்.
மடுவினில் கரிஓல மென்னவந் தருள்செய்த
　　மால்மருக ஞன முதல்வா !
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
　　மலைமேவு குமரேச னே !

—குருபாத தாசர்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008.
139618
D3
031,6(P)
N

6000 copies — 10/7/61 463

Approved by the Text-Book Committee, Madras.
Vide Fort St. George Gazette, Part I—B.
Page 41dated 13—5—59.

15.5.65/L

Used 32 lbs. Double Demy white printing

வி. சூ. சுவாமிநாதன்

பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு, மதுரை-1 : : சுங்குராமசெட்டி தெரு. சென்னை-1

பதிப்புரிமை] [விலை 65 காசு